بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحۡمَدُہٗ وَنُصَلِّیۡ عَلٰی رَسُوۡلِہِ الۡکَرِیۡمِ    وَعَلٰی عَبۡدِہِ الۡمَسِیۡحِ الۡمَوۡعُوۡدِ

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly **BADAR** Qadian TAMIL

தொகுதி 3

இதழ் 20

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

1 ரமலான் 1439 ஹிஜ்ரி கமரி   17 ஹிஜ்ரத் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

17 மே 2018


## அல்லாஹ்வின் கட்டளை

شَهۡرُ رَمَضَانَ الَّذِیۡۤ اُنۡزِلَ فِیۡهِ الۡقُرۡاٰنُ هُدًی لِّلنَّاسِ وَبَیِّنٰتٍ مِّنَ الۡهُدٰی وَالۡفُرۡقَانِ ۚ فَمَنۡ شَهِدَ مِنۡکُمُ الشَّهۡرَ فَلۡیَصُمۡهُ ؕ

ரமலான் மாதம் திருக்குர்ஆன் அருளப் பெற்ற மாதமாகும். குர்ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக்கூடியதும், நேர்வழியை தெளிவாக்கக் கூடியதும், (நன்மை தீமையைப்) பிரித்தரியக் கூடியதும் ஆகும். எனவே, உங்களுள் அம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும்.

(அதிகாரம் அல் பக்கரா : 186)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**வாழ்வின் இந்த நாட்கள் எந்நிலையிலும் கழிந்து விடும். பெரும்பாலார் விலங்குகள் போன்று வாழ்வை கழிக்கின்றனர். ஆனால், இறைவன் மீதுள்ள அன்பிலும் நன்றியுணர்விலும் கழிக்கின்ற நாட்களே அருளுக்குரிய நாட்களாகும். அப்துல் லத்தீஃப் அவர்களின் முன்மாதிரியை எப்போதும் கருத்தில் கொள்ளுங்கள். அவர்களிடமிருந்து எவ்வாறு உண்மையாளர்கள் மற்றும் நன்றியுணர்வு உள்ளவர்களின் அடையாளங்கள் வெளிப்பட்டன? இந்த முன்மாதிரியை இறைவன் உங்களுக்காக எடுத்துக் காட்டியுள்ளான்.**

**வானத்தையும் பூமியையும் வெளிப்படையான செயல்களால் நிரப்பி விட்டாலும் அந்த செயல்களில் நன்றியுணர்வு இல்லையென்றால் அவற்றிற்கு எந்த மதிப்பும் இருக்காது. எதுவரை மனிதன் உண்மையாளனாகவும் நன்றியுணர்வுள்ளவனாகவும் ஆகுவதில்லையோ அதுவரை அவனது தொழுகைகள் கூட அவனை நரகின் பக்கம் கொண்டு செல்லக் கூடியவையாகத்தான் இருக்கும் என்றே அல்லாஹ்வின் வேதத்திலிருந்து நிரூபணமாகி இருக்கின்றது.**

**எல்லா விதமான உணர்வுகளிலிருந்து நீங்கள் தவிர்ந்திருக்க வேண்டும். உங்களை சந்திக்கின்ற ஒவ்வோர் அந்நியரும் உங்களது முகத்தைப் பார்த்து உங்களை புரிந்து கொள்கிறார். உங்களது ஒழுக்கம், பழக்கங்கள், கொள்கையில் உறுதியாக நிலைத்திருப்பது, இறைவனின் கட்டளைகளைப் பேணுவது ஆகியவற்றில் நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர்கள்? என்பதை அவர் பார்க்கின்றார்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

அப்துல் லத்தீஃப் அவர்களுக்கு, அவர்கள் கல்லெறிந்து கொல்லப்படும் அந்த நாள் எவ்வளவு கடினமானதாக இருந்தது. ஒரு மைதானத்தில் கல்லெறிந்து கொல்லப்படுவதற்காக அவர்கள் கொண்டு வரப்பட்டார்கள். ஒரு பெருங்கூட்டம் இதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால், அந்த நாள் தனது இடத்தில் எவ்வளவு மதிப்புமிக்கதாக இருந்தது ? அவர்களது மற்ற எல்லா நாட்களையும் ஒரு பக்கம் வைத்து விட்டு அந்த ஒரு நாளை இன்னொரு பக்கம் வைக்கும்போது அந்த நாள் மதிப்பிலும், கண்ணியத்திலும் உயர்ந்து நிற்கின்றது. வாழ்வின் இந்த நாட்கள் எந்நிலையிலும் கழிந்து விடும்.

பெரும்பாலார் விலங்குகள் போன்று வாழ்வை கழிக்கின்றனர். ஆனால், இறைவன் மீதுள்ள அன்பிலும், நன்றியுணர்விலும் கழிகின்ற நாட்களே அருளுக்குரிய நாட்களாகும். ஒரு நபரிடம் உண்பதற்கு சுவையான சிறந்த உணவுகளும், அழகான மனைவிமார்களும், சவாரி செய்வதற்கான சிறந்த சவாரிகளும் இருக்கின்றன என்று வைத்துக் கொள்வோம். எப்போதும் அவருக்கு தொண்டு செய்வதற்காக பல ஊழியர்களும் இருக்கின்றனர். ஆனால், இந்த எல்லா விஷயங்களின் முடிவு என்னவாக இருக்கும் ? இந்த இன்பங்களும், சுகங்களும் என்றென்றும் இருக்கக் கூடியவையா ? ஒருபோதும் அல்ல. இறுதியில் அவற்றின் முடிவு அழிவாக இருக்கின்றது. எந்த வாழ்க்கையைப் பற்றி மலக்குகள் கூட வியப்படைகின்றனரோ அதுவே வீரமிக்க ஆண் மகனின் வாழ்க்கையாக இருக்கின்றது. அவர் எத்தகைய இடத்தில் நிற்கின்றார் என்றால், கொண்ட கொள்கையில் அவர் உறுதியாக நிலைத்திருப்பது அவரது கலப்பற்ற தன்மை மற்றும் நன்றியுணர்வானது வியப்பிற்குரியதாக இருக்கின்றது. இறைவன் ஆண்மையற்றவரை விரும்புவதில்லை. வானத்தையும் பூமியையும் வெளிப்படையான செயல்களால் நிரப்பி விட்டாலும் அந்த செயல்களில் நன்றியுணர்வு இல்லையென்றால் அவற்றிற்கு எந்த மதிப்பும் இருக்காது. எதுவரை மனிதன் உண்மையாளன் ஆகவும் நன்றியுணர்வு உள்ளவனாகவும் ஆகுவதில்லையோ அதுவரை அவனது தொழுகைகள் கூட அவனை நரகின் பக்கம் கொண்டு செல்லக் கூடியவையாகத்தான் இருக்கும் என்றே அல்லாஹ்வின் வேத்திலிருந்து நிரூபணமாகி இருக்கின்றது. முழுமையான நன்றியுணர்வு உள்ளவராகவும், கலப்பற்ற தன்மையை உடையவராகவும் ஆகாத வரை உள்ளேயிருக்கின்ற வெளி வேஷத்தின் வேர் அகன்று விடுவதில்லை. ஆனால், முழுமையாக நன்றியுணர்வு உள்ளவராக ஆகும்போது அந்த நேரத்தில் கலப்பற்ற தன்மையும் உண்மையும் வந்து விடுகின்றது. முதலில் அவரிடம் இருந்து வந்த நயவஞ்சகம் மற்றும் கோழைத் -தனத்தின் விஷத்தன்மையானது அவரை விட்டு அகன்று விடுகின்றது.

இப்போது குறைவான நேரம்தான் இருக்கின்றது. நான் மீண்டும் மீண்டும் உங்களுக்கு இந்த அறிவுரையைத்தான் கூறுகின்றேன். எனக்கு இப்போது 18 அல்லது 19 வயதுதான் ஆகின்றது. இப்போது அதிகமான நேரம் எஞ்சியிருக்கின்றது என்று எந்தவொரு இளைஞரும் நம்பிக்கை வைக்க வேண்டாம். ஆரோக்கியமாக இருப்பவர் தனது ஆரோக்கியத்தின் மீதும் உடல்நலத்தின் மீதும் பெருமை கொள்ள வேண்டாம். இவ்வாறே சிறந்த நிலைமையில் இருக்கின்ற வேறு எந்த நபரும் தனது அழகின் மீதும் உடல்நலத்தின் மீதும் பெருமை கொள்ள வேண்டாம். இவ்வாறே சிறந்த நிலைமையில் இருக்கின்ற வேறு எந்த நபரும் தமது அழகின் கீழ் நம்பிக்கை வைக்க வேண்டாம். புரட்சிகரமான காலமாக இது இருக்கின்றது. இது இறுதிக் காலமாகும். அல்லாஹ் உண்மையாளரையும் பொய்யரையும் சோதிக்க விரும்புகின்றான். இப்போது உண்மையையும் நன்றியுணர்வையும் வெளிப்படுத்திக் காட்ட வேண்டிய நேரமாகும். அதற்கான இறுதி சந்தர்ப்பம் தரப்பட்டிருக்கின்றது. இந்த நேரம் பிறகு கிடைக்காது. எல்லா நபிமார்களின்

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

முஸ்லிம் உலகம் மிக அதிகமாக குழப்பத்தில் காணப்படுகிறது. அவர்களின் உலக மற்றும் மார்க்க வழிகாட்டிகள் அவர்களை இருளில் தடுமாற விடுகின்றனர். ஒரே நாட்டிலும் நகரிலும் வாழ்பவர்கள் ஒருவர் மற்றவரின் இரத்தத்தின் மீது தாகம் உள்ளவர்களாக இருக்கின்றனர். இதிலிருந்து பயனடைந்தவாறு வெளி உலகம் குறிப்பாக முஸ்லிம் அல்லாத சக்திகள் முஸ்லிம் பிரிவுகளுக்குள் சண்டையிட வைக்கவும் தாம் பயன் பெறுவதற்காகவும் அவர்களுக்கு போர்த் தளவாடங்களை வழங்குகின்றனர். இராணுவ உதவியும் செய்கின்றனர். ஆகவே, இது பெரும் வேதனைக்குரியதாகும். இந்நிலைமை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றவர்களை, அவர்களை ஏற்காதவர்களுக்காக முஸ்லிம் பொதுமக்களுக்காக துஆ செய்வதன் பக்கம் கவனமூட்டக்கூடிய விஷயமாகும். அத்துடன் இன்னும் தேவை உள்ளது. அதே வேளையில் நாம் நமது செயல் நிலைமையையும் ஆன்மீக நிலைமையையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பார்க்க விரும்பிய விதத்தில் அமைக்க வேண்டும்.

---

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில மேற்கோள்களை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். அவற்றில் ஜமாஅத் தமது நிலைமைகளை சிறந்ததாக ஆக்குவதற்காக அவர்கள் போதனை செய்துள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளார்கள். அதாவது அல்லாஹ்வுடைய கட்டளைகளும் முழுமையான கட்டுப்படுதல் அவனது திருப்தியைப் பெறுதல் என்பது எளிய பணியல்ல. ஆனால் இது எத்தகைய விஷயம் எனில், அதற்காக முழுமையான முயற்சி தேவையாகும். அப்போதுதான் குறையிலிருந்து வெளியேறி நாம் அஹ்மதியாக இருப்பதன் நோக்கமும் நிறைவேறும்.

திருக்குர்ஆனை சிந்திந்து படிக்குமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முதலில் வலியுறுத்தி இருந்தார்கள். அதே போன்று அன்னாரின் நூல்களைப் படிப்பதற்கும் மார்க்க அறிவை அதிகமாக்குவதற்கும் கூட நாம் கவனம் செலுத்த வேண்டும். அதுபோன்று கிலாஃபத்துடன் தொடர்பை ஏற்படுத்தவும் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் அதற்காக M.T.A -வின் அருளை வழங்கியுள்ளான். அதன் மூலம் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். காலத்தின் கலீஃபாவின் எல்லா நிகழ்ச்சிகளில் இருந்தும் பயனடைய வேண்டும். எவர்கள் இந்த தொடர்பை குறிப்பான கவனத்துடன் வைத்துள்ளனரோ M.T.A -வை கவனத்துடன் கேட்கிறார்களோ பார்க்கிறார்களோ அவர்களிடம் இருந்து கடிதங்கள் வருகின்றன. அவர்களுடைய ஈமான் மற்றும் நிச்சய உறுதியில் இந்த தொடர்பின் காரணத்தால் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளனர். எனவே இது மிகப்பெரிய வழியாகும். இதிலிருந்து ஒவ்வோர் அஹ்மதியும் பயன் அடைய வேண்டும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூலான நூஹ் நபியின் கப்பல் என்ற நூலை மீண்டும் மீண்டும் படிக்குமாறு கட்டளை இட்டுள்ளார்கள். அதற்காக ஜமாஅத்தில் அதனை படிப்பதற்கு ஏற்பாடு இருக்க வேண்டும். அதுபோன்று M.T.A -விலும் அதனை படிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் அதனை தமது வாழ்வில் அங்கமாக்க முயலவும் வேண்டும். ஒவ்வொருவரும் தாமும் படித்து அதனை வாழ்வின் அங்கமாக்க வேண்டும். அதற்கேற்ப செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

குறிப்பாக இந்த நாட்களில் பாகிஸ்தானின் நிலைமைகளுக்காக துஆ செய்யுங்கள். பாகிஸ்தானியர் தாமும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களை எல்லா விஷமங்களில் இருந்தும் பாதுகாப்பானாக. பொதுவாக நாட்டில் மவ்லவிகளால் ஏற்பட்டுள்ள குழப்பங்களில் இருந்து அல்லாஹ் நாட்டை பாதுகாப்பானாக. பொதுவாக உலகிற்காகவும் துஆ செய்யுங்கள். அது வேகமாக யுத்தத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **ஸ்பெயினின் பைத்ரோ ஆபாதிலுள்ள பஷாரத் பள்ளிவாயிலில்**
**13 ஏப்ரல் 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **ஷஹாதத்** மாதம் **13 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُولُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ ۔ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۔ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۔ إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ ۔ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۔ صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۔

இக்காலத்தில் உலகில் எல்லா பக்கமும் குழப்பங்கள் பரவி உள்ளன. சில இடங்களில் மார்க்கத்தின் பெயரால் பரவி உள்ளன. சில குழப்பங்கள், சில உலகியல் சக்திகள் தமது பெருமை நிலைநாட்டுவதற்காக ஏற்படுகின்றன. சில குழப்பங்கள், ஏழை பணக்காரன் பிரச்சனையால் பரவியுள்ளன. சில குழப்பங்கள், அரசியல் கட்சிகள் ஆட்சிகளை காப்பாற்று -வதற்காக உருவாகின்றன. சில குழப்பங்கள் வீடுகளில் உருவாகின்ற சண்டைகள் பிரச்சனைகள் காரணமாகவும், ஒருவர் மற்றவரின் உரிமையை வழங்காத காரணத்தாலும் இந்த குழப்பங்களும் சண்டைகளும் ஏற்படுகின்றன. சில நேரங்களில் பராம்பரிய பெருமையை நிலைநாட்டுவதற்காக குழப்பம் செய்ய முயற்சி செய்யப்படுகின்றது. சில நேரங்களில் தமது உரிமையைப் பெறுவதற்காக தவறான வழிமுறைகளைக் கையாண்டு குழப்பம் ஏற்படுத்த முயற்சி செய்யப்படுகிறது.

சுருக்கமாக, எந்தக் கோணத்தில் பார்த்தாலும் உலகம் குழப்பம் மற்றும் கிளர்ச்சியால் சூழப்பட்டுள்ளது. அதிலிருந்து ஏழைகளும் பாதுகாப்பாக இல்லை. பணக்காரர்களும் பாதுகாப்பாக இல்லை. முன்னேற்றமடைந்த நாடுகளும் அதிலிருந்து பாதுகாப்பாக இல்லை அல்லது குறைவான வளர்ச்சி அடைந்த நாடுகளும் அல்லது வளர்ச்சி அடையாத நாடுகள் பாதுகாப்பாக இல்லை. மனிதன் இந்த நாட்களில் தன்னை பெரும் முன்னேற்றம் அடைந்தவனாகக் கருதுகிறான். இது அறிவு, சிந்தனை மற்றும் ஒளிமிக்க காலம் என்று அவன் கருதுகிறான். உண்மையில் இருளில் மூழ்கியுள்ளான். இறைவனை மறந்து விட்டு உலகை தேடி அதனையே தனது பாதுகாப்பாகக் கருதி அதனையே தனது 'ரப்' என்று கருதி, அழிவின் விளிம்புக்குச் சென்று கொண்டிருக்கின்றான். இன்னும் சொல்வதாயின், மிக அருகில் சென்று விட்டான். இந்நிலையில் முஸ்லிம் அல்லாத மக்கள் உலகப் பொலிவுகளில் சிக்கியிருப்பதை மனிதன் ஓரளவுக்கு புரிந்து கொள்ளலாம். ஏனென்றால், அவர்களின் மார்க்கத்தில் சீர்குலைவு ஏற்பட்டு விட்டது. அவர்களை அல்லாஹ்வின் பக்கம் வழிகாட்ட அவர்களின் மார்க்கம் திரண்ட மற்றும் முழுமையான ஒரு தீர்வை எடுத்து வைக்கவில்லை. ஆனால், முஸ்லிம்களின் மீது வியப்பு என்னவெனில் அவர்களிடம் ஒரு திரண்ட முழுமையான வேதம் உள்ளது. அதுவும் அதன் அசல் நிலையில் உள்ளது. பிறகு அல்லாஹ் தனது வாக்குறுதிக்கு ஏற்ப இக்காலத்தில் இமாமையும் அனுப்பி உள்ளான். அறிஞர்கள் தமக்கிடையில் உள்ள முரண்பாட்டின் காரணமாக திருக்குர்ஆனின் விளக்கவுரையிலும் மார்க்கத்திலும் இந்த குழப்பங்கள் தவறான தோற்றத்தை உருவாக்கி விட்டன. அதனை சரியாக்க வேண்டியதிருந்தது.

மக்கள் இறைவனால் அனுப்பப்பட்ட அந்த தேர்ந்தெடுக்கப்பட்டவரின் வார்த்தைகளை கேட்பதற்குப் பதில் இந்த முரண்பாடுகளை களைவதன் பக்கம் வருவதற்குப் பதில் முஸ்லிம்களில் பெரும்பாலார் மார்க்கத்தின் பெயரால் குழப்பம் ஏற்படுத்தும் மார்க்க அறிஞர்களின் பின்னால் செல்கின்றனர். அவர்களின் பின்னால் சென்று இறைவனால் அனுப்பப்பட்டவரின் வார்த்தைகளைக் கேட்பதற்கு தயாராக இருப்பதில்லை. அல்லாஹ் இந்த குழப்பங்களை தீர்ப்பதற்காகவும் ஒருவருக்கொருவர் சகோதரத்துவத்தை உருவாக்குவதற்காகவும் இறைவனை அறிந்து கொள்வதற்காகவும் அவரை ஏற்பாடு செய்தான். ஆனால், உலகம் கேட்கத் தயாராக இல்லை. இந்த காரணத்தால்தான் முஸ்லிம் உலகம் மிக அதிகமாக குழப்பத்தில் காணப்படுகிறது. அவர்களின் உலக மற்றும் மார்க்க வழிகாட்டிகள் அவர்களை இருளில் தடுமாற விடுகின்றனர். ஒரே நாட்டிலும் நகரிலும் வாழ்பவர்கள் ஒருவர் மற்றவரின் இரத்தத்தின் மீது தாகம் உள்ளவர்களாக இருக்கின்றனர். இதிலிருந்து பயனடைந்தவாறு வெளி உலகம் குறிப்பாக முஸ்லிம் அல்லாத சக்திகள் முஸ்லிம் பிரிவுகளுக்குள் சண்டையிட வைக்கவும் தாம் பயன் பெறுவதற்காகவும் அவர்களுக்கு போர்த் தளவாடங்களை வழங்குகின்றனர். இராணுவ உதவியும் செய்கின்றனர்.

ஆகவே, இது பெரும் வேதனைக்குரியதாகும். இந்நிலைமை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றவர்களை, அவர்களை ஏற்காதவர் –களுக்காக முஸ்லிம் பொதுமக்களுக்காக துஆ செய்வதன் பக்கம் கவனமூட்டக்கூடிய விஷயமாகும். அத்துடன் இன்னும் தேவை உள்ளது. அதே வேளையில் நாம் நமது செயல் நிலைமையையும் ஆன்மீக நிலைமையையும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நம்மிடம் பார்க்க விரும்பிய விதத்தில் அமைக்க வேண்டும். நமது செயலின் நிலை அன்னார் பார்க்க விரும்பியவாறு இல்லை என்றால் நாமும் கூட குழப்பம், கிளர்ச்சியில் பீடிக்கப்பட்ட மக்களில் அடங்குவோம் என்பது சாத்தியமானதேயாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடர்ந்து மீண்டும் மீண்டும் தனது ஜமாஅத்திற்கு இதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்கள். உங்களது நிலைமைகள் பைஅத் செய்த பிறகு எவ்வாறு இருக்க வேண்டும். அதற்காக நீங்கள் என்ன வழிமுறையைக் கையாள வேண்டும். இது தொடர்பாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய சில மேற்கோள்களை நான் இப்போது எடுத்து வைப்பேன். அன்னார் எதன் பக்கம் கவனமூட்டியுள்ளார்களோ அதனை கவனமாக கேட்க வேண்டும். பலமுறை அதனை கேட்டு விட்டோம்; படித்து விட்டோம் என்று நினைக்க வேண்டாம். படித்தும் கேட்டும் கூட மறந்து விடுகின்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் எவ்வாறு மீண்டும் மீண்டும் பல்வேறு கோணத்தில் இதனை விளக்கியுள்ளார்கள். வருங்காலத்தில் தமது சபைகளில் ஜமாஅத்தும் தமது நிலைமைகளை மேம்படுத்துவதற்காக கவனமூட்டியுள்ளார்கள். அன்னாருக்கு தமது ஜமாஅத்தின் மீது எவ்வளவு கவலை இருந்தது என்பதனை அது காட்டுகிறது. அவர்கள், ஒருபோதும் இந்த நோக்கத்தை மறந்து விடக் கூடாது; பைஅத்துக்குப் பிறகு பல வழி கேடுகள் அவர்களிடம் உருவாகி விடக் கூடாது; அவர்கள் மீண்டும் இருளின் பக்கம் சென்று விடக் கூடாது என்ற கவலை இருந்ததைக் காட்டுகிறது.

ஓரிடத்தில் அன்னார் கூறுகிறார்கள்: நமது ஜமாஅத் இந்த இருள் நிறைந்த காலத்தில் எல்லாப்புறமும் இருளும் கவனமின்மையும் வழிகேடுமாகிய காற்று வீசும் நிலையில் தக்வாவை கைக்கொள்ள வேண்டும். உலகின் நிலை என்னவென்றால், அல்லாஹ்வின் கட்டளைக்குரிய மகத்துவம் இல்லை. கடமைகள் மற்றும் போதனைகளைப் பொருட்படுத்தவில்லை. நமக்கு என்ன உரிமைகள் உள்ளன? அதனை எவ்வாறு செலுத்த வேண்டும்? என்பது புரிவதில்லை. மேலும், அவர்களுக்கு போதிக்கப்பட்டவை பற்றியும் கவனத்தில் கொள்வதில்லை. உலகம் மற்றும் அதன் பணிகளில் அளவுக்கு அதிகமாக மூழ்குதல் காணப்படுகிறது. சிறிதளவு உலக நஷ்டம் ஏற்பட்டாலும் கூட மார்க்கத்தின் பகுதியை விட்டு விடுகின்றனர். அல்லாஹ்வுடைய உரிமையை விட்டு விடுகின்றனர். இவை அனைத்தையும் நாம் வழக்குகள் தொடுப்பவர்கள் மற்றும் கூட்டாக பணி செய்பவர்களிடம் காண முடிகிறது. பேராசையின் எண்ணத்துடன் ஒருவர் மற்றவரிடம் வருகின்றனர். மன எழுச்சிகளுக்கு எதிரில் மிகவும் பலவீனமாக இருக்கின்றனர். சிறிய விஷயம் நடந்தாலும் மன எழுச்சிகள் மிகைத்து விடுகின்றன. இறைவன் பலவீனமாக வைத்து இருக்கும் வரை பாவம் செய்யும் தைரியம் வருவதில்லை. பாவம் செய்யாததற்கு காரணம் அவர்கள் பலவீனமாக இருந்ததுதான். சட்டம் பிடித்து விடக் கூடாது. தண்டனை கிடைத்து விடக் கூடாது என்ற பயம்தான் காரணம். சிறிதளவு பலவீனம் அகன்று விட்டாலும் பாவம் செய்யும் வாய்ப்பு கிடைத்தால் உடனே அதனை செய்து விடுகின்றனர்.

தற்போது இக்காலத்தில் எல்லா இடத்திலும் தேடிப் பாருங்கள். உண்மையான தக்வா அகன்று விட்டது. உண்மையான ஈமான் முற்றிலும் இல்லை. உண்மையான தக்வாவின் விதை வீணாகி விட்டது என்பது உங்களுக்கு தெரிய வரும். இறைவன் நாடியதால் பயிர் முற்றிலும் வீணாகி விடுவதைக் கண்டு வேறு விளைச்சல் உருவாக்குகிறான். ஒரு சந்ததி வீணாகி விட்டால் ஒரு விளைச்சல் வீணாகி விட்டால் அடுத்த விளைச்சலை உருவாக்குகின்றான். ஒரு தலைமுறை வீணாகி விட்டால், அழிந்து விட்டால் ஒரு சமுதாயம் அழிந்து விட்டால் இன்னொரு சமுதாயத்தை உருவாக்குகிறான்.

அவர்கள் கூறுகிறார்கள்: அதே குர்ஆன் புத்தம் புதியதாக காணப்படுகிறது. இறைவன் கூறுவது போன்று إِنَّا نَحْنُ نَزَّلْنَا الذِّكْرَ وَإِنَّا لَهُ لَحَافِظُونَ நாமே இந்த குர்ஆனை இறக்கினோம். நாமே இதனை பாதுகாப்பவனாகவும் இருக்கிறோம். (15:10)

அவர்கள் கூறுகிறார்கள்: அதிகமான ஹதீஸ்களும் உள்ளன. இன்னும் நிறைய பரக்கத்துகள் உள்ளன. ஆனால் உள்ளங்களில் ஈமானும் செயலின் நிலையும் காணவில்லை. அல்லாஹ் என்னை அதற்காகவே அனுப்பினான். அவற்றை மீண்டும் உருவாக்குவதற்கான மைதானம் காலியாக இருப்பதை இறைவன் பார்த்தான். அவனது இறைமை, மைதானம் காலியாக இருப்பதை விரும்பவில்லை. தீமைகள் பரவுகின்றன. இந்நிலையில் இறைவனது தன்மானம் மற்றும் இறைமையின் விருப்பம்தான் இந்த மைதானத்தை உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தருபவர்களால் நிரம்ப விரும்பியது. அவர்கள் மார்க்கத்தை தொடரச் செய்பவர்களாகவும் மார்க்கத்தைப் பரப்புபவர்களாகவும் இருக்க வேண்டும். மார்க்கத்தின்படி செயல்படுபவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்பியது.

அன்னார் கூறுகிறார்கள்: இந்த மைதானம் காலியாக இருப்பதை இறைவன் விரும்பவில்லை. அவ்வாறே மக்கள் விலகி இருப்பதையும் இறைவன் விரும்பவில்லை. எனவே, இறைவன் உயிருள்ள மக்களைக் கொண்ட புதிய சமுதாயத்தை உருவாக்க நாடியுள்ளான். எனவேதான் தக்வாவின் வாழ்வை வாழ வேண்டும் என்பது நமது பிரச்சாரம் ஆகும்.

(மல்.ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 395-396; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆகவே, அஹ்மதிகள் சரியான முறையில் பைஅத் செய்துள்ளார்கள் எனில் அவர்கள் உயிருள்ளவர்களைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். ஆன்மீகமாக உயிருள்ளவர்களைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். அதுவன்றி பயனில்லை. வெறும் வாயளவில் பேசுவதால் மட்டுமே நாம் ஒரு புதிய சமுதாயம் ஆகி விடுவோமா? இல்லை. அதற்காகவும் கூட செயல் நிலைமைகளில் மாற்றத்தையும் உண்மையான தக்வாவையும் உருவாக்குவதும் அவசியம் ஆகும். அப்போதுதான் நாம் இஸ்லாத்தின் உண்மையைப் புரிந்த புதிய சமுதாயம் ஆவோம். அப்போதுதான் நாம் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுபவர்கள் ஆவோம். அப்போதுதான் நாம் பைஅத் உறுதிமொழியை நிறைவேற்றுபவர்களாக ஆவோம்.

இஸ்லாத்தின் உண்மை நிலை என்ன? அதனை எப்படி பெறுவது? என்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: இஸ்லாம் என்பது அல்லாஹ்வுடைய எல்லா ஆதிக்கத்தின் கீழும் வருவதற்கான பெயர் ஆகும். அதன் சுருக்கம் உண்மையான கட்டுப்படுதல் மற்றும் முழுமையான கட்டுப்படுதல் ஆகும். முஸ்லிம் என்பவர் அவரது எந்த விதமான எதிர்பார்ப்புகளும், பரிசுகளின் விருப்பமுமின்றி எல்லா இருப்புகளையும் இறைவன் முன் வைத்து விடுகிறார்.

مَنْ أَسْلَمَ وَجْهَهُ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ முஸ்லிம் என்பவர் அவரது எல்லா இருப்பையும் இறைவனது திருப்தியைப் பெறுவதற்காக அர்ப்பணம் செய்பவர் ஆவார். கொள்கை மற்றும் செயல் ரீதியாக அவரது அனைத்து நடவடிக்கைகளின் நோக்கமும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதாகவே இருக்கும். எல்லா நன்மையான செயல்களும் அவர்களிடம் இருந்து வெளிப்படும். அதுவும் மிகவும் சிரமத்துடன் அல்லது கஷ்டப்பட்டுக் கொண்டு அல்ல. மாறாக, நல்ல ரசனையையும் இனிமையையும் பெறும் முயற்சியுடன் செய்யப்படும்.

அவர்கள் நன்மைகள் செய்வதால் அல்லாஹ்வின் கட்டளைப்படி செயல்படுவதால் அது நம் மீது பெரும் சுமை வந்து விட்டதே என்ற எண்ணத்தில் அல்ல. மாறாக ஒவ்வொரு நற்செயலையும் செய்யும்போதும் மனிதனுக்கு அதில் ஓர் இன்பம் இருக்க வேண்டும். மன மகிழ்ச்சியுடன் செய்ய வேண்டும். அவர்கள் கூறுகிறார்கள்: ஒவ்வொரு கஷ்டத்தையும் நிம்மதியாக்க வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: உண்மையான முஸ்லிம் அல்லாஹ்விடம் அன்பு செலுத்துகிறார். என்னைப் படைத்த அன்புக்குரிய எஜமானன், என்னைப் படைத்தவனும் கருணையாளனும் ஆவான் என்று நம்பி ஏற்றுக் கொண்டவாறு அவனது சந்நிதானத்தில் தலையை வைத்து விடுகிறார். உண்மையான முஸ்லிம்களிடம் உனக்கு இதனால் எந்த நிம்மதியும் கிடைக்காது என்று கூறினாலும் அவர் ஒருபோதும் இதனை விடமாட்டார். இத்தகையவரே அல்லாஹ்விடம் தன்னலமற்ற அன்பை உருவாக்க விரும்புவர் ஆவார். அவர் செய்வதற்கு பிரதியுபகாரம் எதிர்ப்பார்த்தல்ல; நரகத்தின் மீதுள்ள பயத்தாலும் அல்ல. சொர்க்கத்தைப் பெறுவதற்காகவும் அல்ல. மாறாக, அல்லாஹ்வின் மீது கலப்பற்ற நேசம் தேவை எதுவும் கிடைக்கா விட்டாலும் அல்லாஹ்வின் மீது அன்பு இருக்க வேண்டும். ஏனெனில் அவரது இறைவணக்கத்துடன், இறைவனுடனுள்ள தொடர்புகள், கட்டுப்படுதலில் மாய்தல் ஆகிய அனைத்தும் கூலியை எதிர்ப்பார்த்தல்ல. மாறாக அவர் தனது இருப்பை முற்றிலும் அல்லாஹ்வின் புரிதல், அவன் மீது அன்பு மற்றும் கட்டுப்படுதலுக்காகவே படைக்கப்பட்ட –தாகக் கருதுகின்றார். அவருக்கு வேறு எந்த நோக்கமும் இலட்சியமும் இருப்பதில்லை. எனவே அவர் இறைவனால் தரப்பட்ட ஆற்றல்களை தனது உண்மையான வணக்கத்திற்குரியவனின் முகம் தென்பட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவே செலவு செய்கிறார். தன்னலமற்ற முறையில் அல்லாஹ்விடம் தொடர்பு வைப்பீர்கள் எனில் அல்லாஹ்வின் முகம் தென்படும். சரியான தொடர்பு ஏற்படும். சொர்க்கம் நரகம் அவரது அசல் நோக்கமாக இருப்பதில்லை. மாறாக அல்லாஹ்வின் திருப்தியே நோக்கமாக இருக்கிறது.

அல்லாஹ்வுடைய பேரன்பில் தமது நிலை எவ்வாறு உள்ளது என்பதை விளக்கியவாறு அன்னார் கூறுகிறார்கள்: இறைவன் மீது அன்பு கொண்டால் கடுமையிலும் கடுமையான தண்டனை தரப்படும் என்று கூறினாலும் கூட நான் சத்தியமிட்டுக் கூறுகிறேன். எனது இயல்பு எப்படி இருக்கிறது எனில் அந்த கஷ்டங்களையும் துன்பங்களையும் ஒரு ரசனையும் விருப்பமும் கொண்டவாறு சகித்துக் கொள்ளத் தயாராக உள்ளேன். கடும் துக்கமும் துயரமும் தவிர எதுவும் கிடைக்காது என்று கூறப்பட்டாலும் கூட இறைவனுக்கு கட்டுப்படுதலில் இருந்து பாதத்தை ஓர் அடி வெளியில் வைப்பது ஆயிரக்கணக்கான அல்லது எண்ணற்ற மரணத்தையும் துக்கத்தையும் கஷ்டத்தையும் விட அதிக கஷ்டத்தை தரக்கூடிய –தாகும். ஓர் உண்மையான முஸ்லிம் இறைவனின் கட்டளையை விட்டு வெளியில் செல்வது தனது அழிவுக்கு காரணமானதாகக் கருதுகிறார். அந்த கட்டுப்படாமைக்காக எவ்வளவுதான் சொகுசுகள் நிம்மதிகளையும் வாக்களிக்கப்பட்டாலும் சரிதான்.

அவர்கள் கூறுகிறார்கள்: உண்மையான முஸ்லிமாக இருப்பதற்கு இத்தகைய ஓர் இயல்பைப் பெறுவது அவசியம் ஆகும். அல்லாஹ்வின் மீதுள்ள அன்பு, நேசம் எந்த ஒரு நற்கூலி தண்டனை பற்றிய பயம் அல்லது எதிர்ப்பார்ப்பின் அடிப்படையில் இருக்கக் கூடாது. இயல்பின் இயற்கையான நிலையே ஈர்க்கப்பட்டு செய்யும்போது அதுவே அவருக்கு ஒரு சொர்க்கத்தை உருவாக்கித் தந்து விடுகிறது. உண்மையான சொர்க்கம் அதுவேயாகும். எந்த ஒரு மனிதனும் இந்த வழியைப் பின்பற்றாமல் சொர்க்கத்தில் நுழைய முடியாது. எனவே, நான் என்னிடம் தொடர்பு வைத்துள்ள உங்களிடம் இந்த வழியில் நுழையுமாறு போதிக்கிறேன். ஏனெனில் சொர்க்கத்தின் உண்மையான வழி இதுவே ஆகும்.

(மல்∴பூஸாத் தொகுதி 3 பக்கம் 181-183; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

எனவே நமக்கு அல்லாஹ்வுடன் தொடர்பு மற்றும் அன்பு பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு எதிர்பார்ப்பு வைத்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு தெளிவுபடுத்தி –யுள்ளார்கள். அதாவது அல்லாஹ்வுடைய கட்டளைகளும் முழுமையான கட்டுப்படுதல் அவனது திருப்தியைப் பெறுதல் என்பது எளிய பணியல்ல. ஆனால் இது எத்தகைய விஷயம் எனில், அதற்காக முழுமையான முயற்சி தேவையாகும். அப்போதுதான் குறையிலிருந்து வெளியேறி நாம் அஹ்மதியாக இருப்பதன் நோக்கமும் நிறைவேறும். எனவே அன்னார் தாமே அந்த கேள்வியை எழுப்பி அதாவது கட்டுப்படுதல் என்பது எளிய பணியா? என்று கேள்வி எழுப்பி உள்ளார்கள். எவர் முழுமையாக கட்டுப்பட –வில்லையோ அவர் இந்த இயக்கத்திற்கு கெட்ட பெயர் ஏற்படுத்துகிறார். கட்டளைகள் ஒரே மாதிரியானவை அல்ல. அதிகமான கட்டளைகள் உள்ளன. சொர்க்கத்திற்கும் பல வாசல்கள் உள்ளன. ஒருவர் ஒரு வாசல் வழியாக நுழைகிறார். இன்னொருவர் இன்னொரு வாசல் வழியாக நுழைகிறார். அதுபோன்று நரகிற்கும் பல வழிகள் உள்ளன. நீங்கள் அதன் ஒரு வாசலை மூடி விட்டு இன்னொரு வாசல் திறந்து வைக்காதீர்கள்.

(மல்∴பூஸாத் தொகுதி 4 பக்கம் 74; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு கூறுகிறார்கள்: நினைவில் கொள்ளுங்கள். உண்மை நிலையை தன்னிடம் உருவாக்காமல் வெறுமனே பெயரை எழுத வைப்பதால் ஒருவர் ஜமாஅத்தில் இணைந்து விட இயலாது.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒருவருக்கொருவர் அன்பு செலுத்துங்கள். உரிமைகளைப் பறிக்காதீர்கள். இறைவன் உங்கள் மீது அருள் புரிவதற்காக இறை வழியில் பைத்தியக்காரர் –களைப் போன்று ஆகி விடுங்கள். அவனுக்கு வெளியில் எதுவும் இல்லை.

(மல்∴பூஸாத் தொகுதி 4 பக்கம் 75; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ்வின் அருளைப் பெறுவதற்காக முழுமையான ஈமான் கொள்வதும் செயல்படுவதும் அவசியமாகும். செயலின் உதாரணம் என்னவென்றால், இனிப்பை உண்ணாமல் இனிப்பு என்று நாவால் கூறுவதால் நாக்கு இனிக்கப் போவதில்லை. அதுபோன்று அல்லாஹ்வின் மீது அன்பு மற்றும் ஏகத்துவம் குறித்து வாயளவில் ஒப்புக் கொள்வதால் செயலின் பங்கு இல்லாமல் எந்த பயனும் விளையாது. செயலின் பங்கு நிரூபணம் ஆவதற்கு உலகியல் சுமையை இறக்கி விட்டு மார்க்கத்திற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

அன்னார் கூறினார்கள்: நமது ஜமாஅத் இறைவனை மகிழ்ச்சிப்படுத்த விரும்பினால் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கட்டும். மார்க்கம் உங்களுக்கு முன்னுரிமை பெற்றதாக இருக்கட்டும். அன்னார் எச்சரிக்கிறார்கள். உங்களுக்குள் பற்று, நன்றியுணர்வு இல்லை என்றால் நீங்கள் பொய்யர்கள் ஆவீர்கள். அத்தகைய நிலையில் எதிரிக்கு முன் பற்று, நன்றியுணர்வற்றவர்தான் அழிந்து போவார்.

அவர்கள் கூறினார்கள். அல்லாஹ் ஏமாற மாட்டான்; அவனை ஏமாற்றவும் முடியாது. எனவே நீங்கள் உண்மையான கலப்பற்ற தன்மை மற்றும் உண்மையை உருவாக்குங்கள்.

(மல்∴பூஸாத் தொகுதி 3 பக்கம் 188-190; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது குறித்து விளக்கியவாறு கூறினார்கள்: எவ்வாறு இதனை நீங்கள் பெறுவீர்கள்? சஹாபாக்கள் எவ்வாறு அதற்கு முன்னுரிமை வழங்கினார்கள்? நீங்கள் எவ்வாறு அதற்கு முயற்சி செய்ய வேண்டும்? என்பதை

விளக்கியவாறு கூறுகிறார்கள்: பாருங்கள்! இரு வகை மக்கள் உள்ளனர். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு விட்டு உலகியல் பணிகளின் மூழ்கி விடுகின்றனர். ஷய்த்தான் அவர்களின் தலையின் மீது சவாரி செய்கிறான். நான் கூறுவதன் பொருள் வியாபாரம் செய்வது தடுக்கப்பட்டது என்பதல்ல. சஹாபாக்கள் வியாபாரம் செய்தனர். ஆனால், அவர்கள் உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கினர். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றனர். இஸ்லாம் பற்றிய அறிவை நிச்சய உறுதியால் உள்ளம் நிறைந்து விடும் அளவுக்கு பெற்றனர். அதனால்தான் எந்த ஒரு மைதனத்திலும் ஷய்த்தானிடம் அவர்கள் தோற்கவில்லை. ஷய்த்தான் அவர்களை தாக்க முடியவில்லை. ஷய்த்தான் அவர்களிடம் ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. உலகியல் வேலைகளும் செய்தனர். ஆனால் அல்லாஹ்வை எப்போதும் நினைவில் கொண்டனர். எந்த ஒரு விஷயமும் அவர்களை உண்மையை வெளிப்படுத்துவதில் இருந்து தடுக்க முடியவில்லை.

அன்னார் கூறுகிறார்கள்: நான் கூறுவதன் பொருள் இதுதான். முற்றிலும் உலகின் அடியார்களாக ஆகி விடுபவர்கள் உலகை வணங்குபவர்கள் மீது ஷய்த்தான் தனது ஆதிக்கத்தை செலுத்துகிறான். எவர்கள் மார்க்கத்தின் மீது கவலை கொண்டவர்களாக இருப்பார்களோ அவர்கள் ஹிஸ்புல்லாஹ் (அல்லாஹ்வின் கூட்டம்) என்று அழைக்கப்படு –கின்றனர். அவர்கள் ஷய்த்தான் மீது வெற்றி பெறுகின்றனர். வியாபாரத்தால் பொருள் வளர்வது போன்று மார்க்கத்தின் வெற்றியை விரும்புவதையும் ஒரு வியாபாரம் என்று கூறியுள்ளான்.

இந்த வகையில் அல்லாஹ் கூறுகிறான்: هَلْ اَدُلُّكُمْ عَلٰى تِجَارَةٍ تُنْجِيْكُمْ مِّنْ عَذَابٍ اَلِيْمٍ உங்களை துன்ப –கரமான தண்டனையிலிருந்து காப்பாற்றும் ஒரு வியாபாரத்தை உங்ளுக்கு கூறட்டுமா? எல்லா –வற்றிலும் உயர்ந்த வியாபாரம் மார்க்கத்திற்காக செய்வதாகும். அது துன்பரமான தண்டனையில் இருந்து காப்பாற்றுகிறது. நானும் இறைவனின் அதே வார்த்தையில் உங்களிடம் கூறுகிறேன். هَلْ اَدُلُّكُمْ عَلٰى تِجَارَةٍ تُنْجِيْكُمْ مِّنْ عَذَابٍ اَلِيْمٍ மார்க்கத்தின் மேம்பாடு மற்றும் விருப்பத்தில் குறைவு ஏற்படுத்தாதவர்களின் மீது நான் நம்பிக்கை வைக்கிறேன். எவர்கள் அந்த விருப்பத்தில் குறைபாடு கொண்டார்களோ அவர்களை ஷய்த்தான் பிடித்து விடக் கூடாதே என்று நான் அஞ்சுகிறேன். எவர்களிடம் நிரந்தரமான ஈடுபாடு இல்லையோ அவர்கள் உலகை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை தர முடியாது. பிறகு சோம்பல் வருகிறது. பிறகு படிப்படியாக மனிதன் ஷய்த்தானின் பிடியில் வந்து விடுகிறான். எனவே ஒருபோதும் சோம்பல் கூடாது. புரியாத ஒவ்வொரு காரியத்தை கேட்க வேண்டும். அதன் மூலம் அதன் ஞானங்களை தெரிந்து கொள்வதற்காக கேட்பது தடுக்கப்பட்டதல்ல. மறுப்பதை விட கேட்பது நல்லது. ஒருவர் ஏற்றுக் கொள்ளவில்லை; அன்னியராக இருக்கிறார் எனில் நீதியின் விளைவு என்னவெனில் அவர் கேட்க வேண்டும். செயல் மேம்பாட்டிற்காக அவர் அறிவைப் பெற வேண்டியதும், கேள்வி கேட்பதும் அவசியம் ஆகும். எவர் அறிவு மேம்பட வேண்டும் என்று விரும்புகிறாரோ அவர் திருக்குர்ஆனை ஆழ்ந்து படிக்க வேண்டும். புரியா விட்டால் கேட்க வேண்டும். சில ஞானங்களை விளங்க முடியா விட்டால் மற்றவரிடம் கேட்டு பயன் பெற வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: திருக்குர்ஆன் ஒரு மார்க்கக் கடல் ஆகும். அதற்குள் அதிக அரிதான முத்துக்கள் கிடக்கின்றன.

(மல்.ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 193-194; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஒரு சந்தர்ப்பத்தில் ஜமாஅத்திற்கு தக்வாவின் முக்கியத்துவம் குறித்து கவனமூட்டிய –வாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறினார்கள்: நாம் நியமிக்கப்பட்டதன் நோக்கம், தக்வாவின் மைதானம் வெறுமையாக உள்ளது; தக்வா வேண்டும் என்பதுதான். ஆயுதம் தாங்குவதற்காக அல்ல. ஆயுதம் ஏந்த வேண்டியதில்லை. தற்கால தீவிரவாதக் குழுக்கள் இஸ்லாத்தின் பெயரால் செய்வதுபோன்று மக்களின் தலையைக் வெட்ட வேண்டாம். மாறாக மார்க்கத்தை பரப்ப வேண்டும். மார்க்கத்தை பிரச்சாரம் செய்ய வேண்டும். மார்க்க பயிற்சி வழங்க வேண்டும். அதற்காக முதலில் உங்களுக்குள் தக்வாவை உருவாக்குங்கள். தக்வா இருந்தால் பிறகு எல்லா பணிகளும் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பமாகி விடும்.

அவர்கள் கூறினார்கள்: ஆயுதம் ஏந்த வேண்டியதில்லை. அது ஹராம் ஆகும். நீங்கள் தக்வாவை கைக் கொள்வீர்கள் என்றால் முழு உலகும் உங்களுடன் இருக்கும். எனவே தக்வாவை உருவாக்குங்கள். எவர்கள் மது அருந்துகிறார்களோ அல்லது எவர்களுடைய மார்க்கத்தில் மது அருந்துவது அதிக நடைமுறையில் உள்ளரோ அவர்களுக்கு தக்வாவுடன் எந்த தொடர்பும் இருக்க முடியாது. அவர்கள் நன்மையுடன் யுத்தம் செய்கிறார்கள். ஆகவே அல்லாஹ் நமது ஜமாஅத்திற்கு அத்தகைய ஒரு நற்பேற்றை வழங்குவானாக. அவர்களுக்கு வாய்ப்பளிப்பானாக. அவர்கள் தீமைகளுடன் போரிடுவார்களாக. இறையச்சம், தூய்மை என்ற மைதானத்தில் முன்னேறுவார்களாக. அதுவே பெரும் வெற்றி ஆகும். அதைவிட பெறும் பொருள் எதுவும் கிடைக்கப் போவதில்லை. வாளால் யுத்தம் செய்ய வேண்டியதில்லை. முதலில் தக்வாவை பெறுவதற்காக உங்கள் நஃப்ஸுடன் யுத்தம் செய்யுங்கள். பிறகு மனிதன் மற்றவருக்கு இந்த தூதை எடுத்துச் சொல்ல முடியும். அதனால் மற்றவர் கோபம் கொள்ளாமல் இருப்பார்கள். இப்போது உலகிலுள்ள எல்லா மார்க்கங்களையும் பாருங்கள். அங்கு அசல் நோக்கமாகிய தக்வா மறைந்து விட்டது. உலகியல் பொலிவுகள் இறைவனாக்கப்பட்டுள்ளன. உண்மையான இறைவன் மறைந்துள்ளான். உண்மையான இறைவன் இழிவுப்படுத்தப்படுகிறான். இறைவன் நாடினால் நீங்கள் ஒப்புக் கொள்ள வேண்டும். உலகிற்கு ஞானம் கிடைக்க வேண்டும். எவர்கள் உலகினை இறைவனாக்கி உள்ளார்களோ அவர்கள் இறைவன் மீது நம்பிக்கை கொண்டவர்களாக ஆக முடியாது.

(மல்.ஃபூஸாத் தொகுதி 4 பக்கம் 357-358; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஆகவே, ஒவ்வொருவரும் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். இறைவனின் உரிமையைச் செலுத்துவதற்குப் பதில் உலகியல் நோக்கங்களைப் பெறுவதற்கு மட்டும் நாம் முயலவில்லையே? நோக்கம் உலகியல் நோக்கங்களைப் பெறுவதாக மட்டுமே இல்லையே? இறைவனது உரிமை செலுத்த வேண்டும் எனில் பிறகு மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும். பிறகு உலகியல் நோக்கங்களை புறந்தள்ள வேண்டும். நாம் இதனை பார்க்க வேண்டும். நாம் மார்க்கத்துக்கு முன்னுரிமை தருகிறோமா? அல்லது உலகம் நமது மார்க்கத்தின் மீது மிகைத்துள்ளதா? நாம் தக்வாவின் மீது முன்னேறுகிறோமா? அல்லது தக்வா குறைகிறதா? என்பதை அறிய வேண்டும்.

நமது ஆன்மீகத்தை மேம்படுத்தி இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்துவதுடன் நமது மார்க்க அறிவை அதிகமாக்குவதற்காகவும் அதிக கவனமூட்டியவாறு ஓரிடத்தில் அன்னார் போதனை செய்கிறார்கள்: முர்ஷித் மற்றும் முரீது இருவருக்கும் இடையில் உள்ள தொடர்பு ஆசிரியருக்கும் மாணவனுக்கும் இடையில் உள்ள தொடர்பு போன்றதாகும். மாணவன் ஆசிரியரிடம் இருந்து பயனடைவது போன்று முரீது, முர்ஷிதிடம் இருந்து பயனடைகிறார். மாணவன் ஆசிரியருடன் தொடர்பு வைத்து தமது கல்வியில் மேம்படாமல் பயன்பெற முடியாது. அதுபோன்றுதான் முரீத் உடைய நிலையும் ஆகும். ஓர் ஆசிரியரிடம் ஒரு மாணவர் தொடர்பு வைத்துள்ளார். அவர் அறிவைப் பெறவில்லை. அவர் சொல்வதன் படி செய்யவில்லை எனில் பயன் பெற முடியாது. அதுபோன்றுதான் முரீது மற்றும் முர்ஷித் உடைய தொடர்பும் ஆகும் நீங்கள் அவர் கூறியபடி அமல் செய்யமால் எனக்கு தொடர்பு இருக்கிறது என்று கூறுவதனால் மட்டுமே பயன் பெற முடியாது.

அன்னார் கூறுகிறார்கள்: இந்த இயக்கத்துடன் நீங்கள் தொடர்பை ஏற்படுத்தி உங்கள் அறிவையும் ஞானத்தையும் அதிகரிக்க வேண்டும். ஒரு மாணவன், உண்மையைத் தேடுபவர் ஒரு நிலையை அடைந்து அங்கேயே நின்று விடக் கூடாது. அதனால் ஷய்த்தான் அவரை வேறு புறம் எடுத்துக் கொண்டு சென்று விடுவான். தேங்கி இருக்கும் தண்ணீரில் துர்நாற்றம் உருவாது போன்று தண்ணீர் தேங்கி விட்டால் அது துர்நாற்றம் எடுப்பதுபோன்று ஒரு நம்பிக்கையாளர் தமது முன்னேற்றத்திற்காக முயற்சி செய்யா

விட்டால் பிறகு அவர் வீழ்ந்து விடுகிறார். சரியான முஃமின் முன்னேற்றத்தின் பக்கம் அடியெடுத்து வைக்க வேண்டும். ஓரிடத்தில் நின்றார் என்றால் நிற்க முடியாமல் வீழ்ந்து விடுவார். எனவே நற்பேறுடையவரின் கடமை அவர் மார்க்கத்தைத் தேடுவதில் ஈடுபட்டிருக்க வேண்டும். நம்முடைய நபி கரீம் (ஸல்) அவர்களை விட முழுமை பெற்ற மனிதர் எவரும் உலகில் வாழவில்லை. ஆனால் அவர்களுக்கும் கூட ரப்பி ஸித்னீ இல்மா என்ற துஆ கற்றுத் தரப்பட்டது. பிறகு வேறு எவர் தமது அறிவு ஞானத்தில் முழுமையான நம்பிக்கை கொண்டு உட்கார முடியும்? வருங்காலத்தில் முன்னேற வேண்டிய தேவையில்லை என்று நினைக்க முடியும்? மனிதன் எந்த அளவு அறிவில் முன்னேறுவானோ அந்த அளவுக்கு அவருக்கு தீர்வு காண வேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன என்பது தெரிய வரும். ஆரம்பப் பார்வையில் சிலர் ஜியாமெட்ரியிலுள்ள வடிவங்களை வீணானதாகக் கருதுகின்ற சிறுவர்களைப் போன்று வீணானதாக கருதுவர். ஆனால் அதுவே அவருக்கு பின்னால் உண்மையான விஷயங்களாக புரிய வரும். எனவே எந்த அளவு முடியுமோ அந்த அளவுக்கு தமது தகுதியை உயர்த்துவதுடன் தமது அறிவை அதிகமாக்குவதற்கான முயற்சியையும் முழுமைப்படுத்த வேண்டும். நீங்கள் நிறைய வீணான காரியங்களை விட்டு விட்டு இந்த இயக்கத்தை ஒப்புக் கொண்டுள்ளீர்கள். அது பற்றி நீங்கள் முழுமையான அகப்பார்வையைப் பெறவில்லை எனில் என்ன பயன்? பைஅத் செய்து விட்டேன். அஹ்மதி ஆகி விட்டேன் அல்லது பிறப்பு அஹ்மதி என்று கூறி விட்டு சுயமே அறிவைப் பெறவில்லை என்றால் மார்க்க அறிவை அதிகமாக்கவில்லை என்றால் நீங்கள் பிறப்பு அஹ்மதியாகி இருப்பதும் பயன் தராது. பைஅத் செய்ததும் பயன் தராது.

அவர்கள் கூறுகிறார்கள்: ‟அறிவை அதிகமாக்காமல் உங்கள் நிச்சய உறுதியில் எந்த சக்தி உருவாகும்? சின்னச் சின்னச் விஷயங்களில் சந்தேகங்கள் உருவாகும். பிறகு நிலை தடுமாறும் அபாயமும் உள்ளது.”

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 193; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நிறைய மக்கள் பின்தங்கி விடுகிறார்கள். ஆட்சேபனை செய்கின்றனர் அல்லது சிலர் எனது உறவினர்கள் அஹ்மதிகள் என்று கூறி அதனால் அஹ்மதியாக இருக்கிறார்கள் எனில் அவர்களுக்கும் எந்த பயனும் இல்லை. அறிவை அதிகரிக்கும் அளவுக்குதான் சந்தேகங்கள் அகல முடியும். பிறகு ஷய்த்தான் தடுமாற வைக்க முடியாது. திருக்குர்ஆனை சிந்திந்து படிக்குமாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முதலில் வலியுறுத்தி இருந்தார்கள். அதே போன்று அன்னாரின் நூல்களைப் படிப்பதற்கும் மார்க்க அறிவை அதிகமாக்குவதற்கும் கூட நாம் கவனம் செலுத்த வேண்டும். அதுபோன்று கிலாஃபத்துடன் தொடர்பை ஏற்படுத்தவும் முயற்சி செய்ய வேண்டும். அல்லாஹ் அதற்காக M.T.A –வின் அருளை வழங்கியுள்ளான். அதன் மூலம் தொடர்பை ஏற்படுத்த வேண்டும். காலத்தின் கலீஃபாவின் எல்லா நிகழ்ச்சிகளில் இருந்தும் பயனடைய வேண்டும். எவர்கள் இந்த தொடர்பை குறிப்பான கவனத்துடன் வைத்துள்ளனரோ M.T.A –வை கவனத்துடன் கேட்கிறார்களோ பார்க்கிறார்களோ அவர்களிடம் இருந்து கடிதங்கள் வருகின்றன. அவர்களுடைய ஈமான் மற்றும் நிச்சய உறுதியில் இந்த தொடர்பின் காரணத்தால் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறியுள்ளனர். எனவே இது மிகப்பெரிய வழியாகும். இதிலிருந்து ஒவ்வோர் அஹ்மதியும் பயன் அடைய வேண்டும்.

ஒவ்வொருவரும் தமக்குள் அன்பு நேசத்தை ஏற்படுத்தவும் பிறரது கஷ்டங்களை உணரவும் ஒருவர் மற்றவரின் உரிமையை தருவதற்கு கவனமூட்டியவாறும் அன்னார் கூறுகிறார்கள். அசல் விஷயம் என்னவெனில், உட்புறத்தை பொருத்தமட்டில் எல்லாரும் ஒரே போன்று இருப்பதில்லை. எல்லா விதைகளிலிருந்தும் கோதுமை வெளிப்படுகிறதா? பூமியில் விதைக்கப்பட்ட எல்லா விதைகளும் கோதுமையை வெளிப்படுத்துவதில்லை. சில தானியங்கள் வீணாகி விடுகின்றன. சிலவற்றை பறவைகள் தின்று விடுகின்றன. இன்னும் சில சரியான பழங்களை தருவதில்லை. சுருக்கமாக, சில விதைகள் நன்றாக இருக்கின்ற வரை தகுதி வாய்ந்தவையாக உள்ளன. அவற்றை எவரும் அழிக்க முடியாது. இறைவனுக்காக ஒரு ஜமாஅத் தயார் ஆகும்போது அதுவும் கூட ஒரு வயலைப்போன்று இருக்கிறது. எனவே இந்த விதியின்படிதான் அதன் முன்னேற்றம் ஏற்படுகிறது. ஒருவர் பலவீனமாக இருக்கிறார். ஒருவருக்கு மார்க்க அறிவு அதிகமாக இருக்கிறது. ஒருவர் ஒரு வகையில் சிறந்தவர். ஒருவர் இன்னொரு வகையில் நல்லவர். அவர்கள் தத்தமது திறமைகளுக்கு ஏற்ப இருக்கின்றனர். எனவே பலவீனமானவரையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டியது மேம்பட்ட நிலையில் இருப்பவரது பணியாகும்.

அவர்கள் கூறுகிறார்கள்: எனவே பலவீனமான சகோதரருக்கு உதவி செய்வது நமது வழக்கமாக கொள்ள வேண்டும். அவர்களுக்கு சக்தியை வழங்க வேண்டும். இரு நண்பர்கள் உள்ளனர். ஒருவருக்கு நீந்த தெரியும். ஒருவருக்கு நீந்த தெரியாது. பிறகு முதலாமவர் மற்றவரை மூழ்காமல் காப்பாற்ற வேண்டுமா? மூழ்க விட வேண்டுமா? அவ்வாறு செய்வது எப்படி பொருத்தமான செயலாக இருக்க முடியும்? அவரை மூழ்குவதிலிருந்து காப்பாற்றுவது அவரின் கடமையாகும். எனவேதான் திருக்குர்ஆன் கூறுகிறது. تَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى நன்மை மற்றும் தக்வாவில் ஒருவருக்கொருவர் உதவி செய்யுங்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: பலவீனமான சகோதரரின் சுமையை தூக்குங்கள். அவரது செயல், ஈமான் மற்றும் பொருளாதார பலவீனங்களில் அவருடன் இருங்கள். செயல் பலவீனம் இருந்தால் அவருக்கு உதவி செய்யுங்கள். அவரைப் போன்று செயல் பலவீனம் காட்ட வேண்டுமா? இல்லை அதனை அகற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். ஈமானில் பலவீனம் இருந்தால் உங்கள் ஈமான் உறுதியாக இருந்தால் அவரது ஈமானை காப்பாற்ற முயற்சி செய்ய வேண்டும். பொருளாதார பலவீனம் இருந்தால் உங்களால் பொருளாதார உதவி செய்ய முடிந்தால் செய்யுங்கள் அல்லது ஜமாஅத் அமைப்பிடம் கூறுங்கள். இயன்ற அளவு ஜமாஅத் அமைப்பு அவருக்கு உதவி செய்யும். உடல் ரீதியான பலவீனத்திற்கும் கூட சிகிச்சை செய்யுங்கள். வெளிப்படையான உடலியல் பலவீனம் இருந்தால் அவரது நோயின் வேளையில் சிகிச்சை செய்யுங்கள். சக்தி உள்ளவர்கள் பலவீனமானவர்களுக்கு உதவி செய்யவில்லை எனில் ஒரு ஜமாஅத்தாக இருக்க முடியாது. அதற்கு ஒரே நிலைதான். அதாவது அவரது பலவீனத்தை மறைக்க வேண்டும். மற்றவரின் பலவீனத்தை கூறுவதற்கு பதில் மறைக்க முயற்சி செய்ய வேண்டும். சஹாபாக்களுக்கு இதே போதனைதான் தரப்பட்டது. புதிய முஸ்லிம்களின் பலவீனத்தைப் பார்த்து சிடுசிடுக்காதீர்கள். நீங்களும் அவ்வாறே பலவீனமாக இருந்தீர்கள். ஒவ்வொரு பெரியவரும் சிறியவருக்கு சேவை செய்ய வேண்டும். அன்பு மற்றும் நேசத்துடன் பழக வேண்டும். பாருங்கள்! ஒருவர் மற்றவரை தின்று கொண்டு இருந்தால் அது ஒரு ஜமாஅத் ஆக இருக்க முடியாது. நான்கு பேர் கூடி இருந்து கொண்டு தமது ஏழை சகோதரரைப் பற்றி புறம் பேசுதல் கூடாது. ஒருவர் மற்றவரை சாப்பிட முடியாது. சாப்பிடுவது என்றால் இதுதான்.

அல்லாஹ் கூறுகின்றான்: நீங்கள் மற்றவரைப் பற்றி புறம் பேசாதீர்கள். குறை சொன்னீர்கள் எனில் நீங்கள் உங்கள் இறந்த சகோதரரின் மாமிசத்தை சாப்பிடுகிறீர்கள். ஒவ்வொருவரின் தீமைகளையும் பார்க்காதீர்கள். மாறாக நல்லவற்றை பாருங்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒருவர் மற்றவரை தின்று கொண்டு இருந்தால் ஒரு ஜமாஅத், ஜமாத்தாக இருக்க முடியாது. நான்கு பேர் கூடி இருந்து தமது ஏழை சகோதரரைப் பற்றி புறம் பேசுவது அவரது குறைகளை பேச தொடங்குவது, பலவீனமானவர்கள் மற்றும் ஏழைகளை இழிவுபடுத்துவது, அவர்களை இழிவாகப் பார்த்தல் ஆகியவை ஒருபோதும் கூடாது. கூட்டத்தில் ஒரு சக்தி உருவாக வேண்டும் என்றால் ஒற்றுமை உருவாக வேண்டும். அதனால் அன்பு உருவாகிறது. பரக்கத்துகள் உருவாகின்றன. நான் பார்க்கின்றேன். சின்னச் சின்ன விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன. அதன் விளைவாக நமது சின்னச்

சின்ன விஷயங்களையும் பார்த்துக் கொண்டு இருக்கிற நமது எதிரிகள் நமது சாதாரண விஷயங்களைக் கூட பத்திரிகைகளில் பெரியதாக ஆக்கி வெளியிட்டு விடுவர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: பிறகு அதனைக் கொண்டு படைப்பினங்களை வழிகெடுக்கின்றனர். பாருங்கள்! இவர்களிடம் இன்னின்ன குறைகள் உள்ளன என்று மக்களிடம் கூறுகின்றனர். பொது மக்கள் அதனை ஆய்வு செய்யாமால் வழிதவறி விடுகின்றனர்.

அவர்கள் கூறுகின்றார்கள்: உட்புறமான பலவீனங்கள் இல்லையெனில் இத்தகைய கருத்துக்களை வெளியிடுவதற்கு எப்படி துணிச்சல் வரும்? அத்தகைய செய்திகளை வெளியிட்டு மக்களை ஏமாற்ற முடியுமா? நல்லொழுக்க ஆற்றலை ஏன் பரந்ததாக்கப்படுவதில்லை? இது எப்போது நடக்கும்? அநுதாபம், அன்பு, பற்று, கண்ணியம் இவை பொதுவானதாக ஆகும்போது தான் எல்லா வழக்கங்களின் மீது கருணை மற்றும் திரையிடுதலுக்கு முன்னுரிமை தரும்போதுதான் இது நடக்கும். ஒருவரின் தவறுகளைப் பார்த்தால் திரையிட வேண்டும். ஒருவரின் பலவீனத்தை வெளியிடும் வியத்தகு வழக்கம் உருவாகி விட்டது. கணவன் மனைவி கூட ஒருவர் மற்றவரின் தவறை வெளியே கொண்டு வந்து விடுகிறார்கள். அதனை ரிக்கார்டிங் செய்கிறார்கள். சின்னச் சின்ன காரியங்களுக்காக உள்ளம் வேதனை அடையவும் கஷ்டப்படவும் கூடிய வகையில் அத்தகைய கடுமையான முறையில் பிடிக்கக் கூடாது.

(மல்.்பூஸாத் தொகுதி 3 பக்கம் 347-348; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு சகோதரத்துவம் மற்றும் அனுதாபம் தொடர்பாக கூறினார்கள்: நமது ஜமாஅத் ஒருவர் மற்றவர் மீது உண்மையான அனுதாபம் காட்டாத வரை பசுமை தோன்றாது. வளரவும் மலரவும் வேண்டும் எனில் ஒருவருக்கு ஒருவர் உண்மையான அனுதாபம் காட்ட வேண்டும். முழுமையான சக்தி தரப்பட்டவர் பலவீனமானவர் மீது அன்பு செலுத்த வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் கேள்விப்படு –கிறேன். ஒருவரின் தவறைப் பார்த்து அவருடன் நற்குணத்துடன் நடந்து கொள்ளாமல் வெறுப்புடன் நடந்து கொள்கிறார் எனில் அவருக்காக துஆ செய்யாமல் அவர் மீது அன்பு காட்டாமல் நல்லொழுக்கத்துடன் அவருக்கு புரிய வைக்காமல் அவர் மீது காழ்ப்புணர்ச்சி காட்டுகிறார் எனில் மன்னித்து அனுதாபம் காட்டாமல் இருந்தால் பிறகு வழி தவறி வழி தவறி பிறகு முடிவு தீயதாகி விடுகிறது. இறைவனுக்கு இது ஏற்புடையதில்லை. ஒருவர் மற்றவருக்கு அனுதாபம் காட்டும்போது தான் ஜமாஅத், ஜமாஅத் ஆக இருக்கும். திரையிட வேண்டும். இந்த நிலை உருவாகும்போது எல்லாரும் ஒரே இருப்பாகி ஒருவர் மற்றவரை தமது சொந்த சகோதரரை விட மேலாக கருதுகிறார். தமது மகனிடம் ஒரு தவறைக் கண்டால் அது மறைக்கப்படுகிறது. தனியாக அவருக்கு புரிய வைக்கப்படுகிறது. எவரும் அதனை பிரசுரிக்க விரும்புவதில்லை. தமது மகனிடம் ஒரு பலவீனத்தைப் பார்த்தால் அவருக்கு புரிய வைக்கிறார். அத்தவறை உலகில் பரப்புவதில்லை. நெருங்கிய உறவினரின் தவறு என்றால் திரையிடப்படுகிறது. அதனை பரப்புவதில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: இறைவன் உங்களுக்கு சகோதரன் ஆக்கியுள்ளான். பிறகு சகோதரரின் உரிமை இதுவா? இங்கு சகோதரர் என்பது நெருங்கிய உறவினர்கள் ஆவர். உலகியல் சகோதரர் சகோதரத்துவத்தை விடுவதில்லை.

அவர்கள் தமது உறவினர்களின் உதாரணத்தை கூறுகிறார்கள்: நான் மிர்ஸா நிஸாமுத்தின் போன்றவர்களை பார்க்கிறேன். மிர்ஸா நிஸாமுத்தின் அன்னாரது உறவினராக இருந்தார். எதிரியாகவும் இருந்தார். மார்க்கத்தை விட்டு விலகியும் இருந்தார். அவர் தீயவராக இருந்தார். ஏதாவது விவகாரம் எனில் மூவரும் ஒன்று சேர்ந்து கொள்வர். ஏழ்மை ஒருபுறம் இருந்தாலும் சில வேளையில் மனிதன் விலங்குகள் குரங்குகள் நாய்களிடம் இருந்தும் கற்றுக் கொள்கிறான். உட்புற பிரிவினை ஏற்படுத்துவது வாழ்த்துக்குரிய முறையல்ல. சஹாபாக்களுக்கு கூட அல்லாஹ் அதன் வெகுமதிகளையும் நிஃமத்துகளையும் தெளிவு –படுத்துகிறான். நீங்கள் தங்கத்தின் மலைகளைச் செலவு செய்தால் கூட இந்த சகோதரத்துவத்தைப் பெற முடியாது. அத்தகைய சகோதரத்துவம் உங்களுக்கு ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலம் கிடைத்துள்ளது என்று கூறுகின்றான். இவ்வாறுதான் அல்லாஹ் தற்போது இந்த இயக்கத்தை உருவாக்கியுள்ளான். இதுபோன்ற ஒரு சக்தியை இங்கும் உருவாக்குவான்.

அவர்கள் கூறுகிறார்கள்: இறைவனிடம் நான் பெரும் நம்பிக்கை வைத்துள்ளேன். அவன் என்னிடம் வாக்குறுதி தந்துள்ளான். جَاعِلُ الَّذِيْنَ اتَّبَعُوْكَ فَوْقَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ எவர்கள் உம்மை ஏற்றுக் கொண்டுள்ளனரோ அவர்களை உம்மை மறுப்பவர்களை விட்டும் கியாமத் வரை மேலோங்கச் செய்வேன். **(3:56)**

அவர்கள் கூறுகிறார்கள்: நான் நிச்சயமாக அறிகிறேன். அல்லாஹ் ஒரு ஜமாஅத்தை உருவாக்குவான். அது கியாமத் வரை மேலோங்கி இருக்கும். அவர்கள் ஒருவர் மற்றவருக்கு உதவியாக இருப்பர். அவர்கள் ஒருவர் மற்றவரை தமது உண்மையான சகோதரரை விட மேலானவராகக் கருதுவர். ஒருவருக்கு ஒரு மகன் இருக்கிறான். அவனிடம் ஒரு தவறு வெளிப்பட்டால் அது மறைக்கப்படுகிறது. அது தனிப்பட்ட முறையில் புரிய வைக்கப்படுகிறது. அதனை வெளிப்படுத்துபவரை அவர் விரும்புவதில்லை. தமது மகனிடம் தீமையைக் கண்டால் புரிய வைக்கிறார்; பரப்புவதில்லை. நெருங்கிய உறவினர் எனில் குறை மறைக்கப்படுகிறது; பரப்புவதில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: பிறகு இறைவன் உங்களை சகோதரர் ஆக்கியுள்ளான். பிறகு சகோதரரின் உரிமை இதுவா? சகோதரர் என்றால் ஒவ்வொரு நெருங்கிய உறவினர்கள் உலகியல் சகோதரர் சகோதரத்துவத்தை விடுவதில்லை.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனது உறவினர்களின் உதாரணத்தை கூறுகிறார்கள். நான் மிர்ஸா நிஸாமுத்தின் போன்றவர்களைப் பார்த்துள்ளேன். அன்னாரின் எதிரியும் மார்க்கத்தை விட்டு விலகியவருமாக இருந்தார். தீய வாழ்வு ஏதாவது விஷயம் என்றால் மூன்று பேரும் ஒன்று சேர்ந்து கொள்வர் ஏழ்மை தனி.

அவர்கள் கூறுகிறார்கள்: சில வேளைகளின் மனிதன் மிருகங்கள் குரங்குகள் நாய்களிடம் இருந்து கற்றுக் கொள்கிறான். உட்புற பிரிவுகள் உண்டாக்குதல் வாழ்த்துக்குரியதன்று. சஹாபாக் –களிடம் கூட அல்லாஹ் தமது அருள்களையும் வெகுமதிகளையும் பற்றி கூறுகின்றான். தங்கத்தின் மலையை செலவு செய்தால் கூட ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலம் கிடைத்த அந்த சகோதரத்துவம் கிடைக்காது. அதேபோன்ற ஆற்றல் இங்கும் உருவாக்குவதற்காகத்தான் அல்லாஹ் இந்த இயக்கத்தை உருவாக்கி உள்ளான்.

அவர்கள் கூறுகிறார்கள்: இறைவன் மீது எனக்கு பெரும் நம்பிக்கை உள்ளது. அவர் வாக்களித்துள்ளவர் جَاعِلُ الَّذِيْنَ اتَّبَعُوْكَ فَوْقَ الَّذِيْنَ كَفَرُوْٓا اِلٰى يَوْمِ الْقِيٰمَةِ எவர்கள் உம்மை ஏற்றுக் கொண்டுள்ளனரோ அவர்களை உம்மை மறுப்பவர்களை விட்டும் கியாமத் வரை மேலோங்கச் செய்வேன். அவன் ஒரு ஜமாஅத்தை நிறுவுவான் என நான் உறுதியாக நம்புகிறேன். ஆனால் இந்த நாட்கள் சோதனையின் காலம் ஆகும். பலவீனத்தின் காலங்கள் ஆகும். குறிப்பாக தற்போது பாகிஸ்தானின் அஹ்மதிகள் இதன் மீது கவனம் வைக்க வேண்டும். அவர்களின் நிலைமை பலவீனமாக உள்ளது. அரசும் கூட அவர்களுக்கு எதிராக உள்ளது. முன்னரை விட அதிகமாக செயல்படுகின்றனர். குறிப்பாக இந்த நாட்களில் தம்மிடம் மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும்.

அவர்கள் கூறுகிறார்கள்: பலவீனமான நாட்களில் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் தருகின்றான். அவர்கள் தம்மை சீர்திருத்திக் கொள்ள வேண்டும். தமது நிலைமைகளில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். பாருங்கள்! ஒருவர் மற்றவரை புகார் செய்வது, உள்ளம் வேதனைப்பட வைப்பது, கடும் சொல்லால் மற்றவரின் உள்ளத்தை நோகச் செய்தல், பலவீனமானவர்களை ஏளனமாகக் கருதுதல் பாவமாகும். உங்களுக்கு இடையில் ஒரு புதிய

உறவு முறை சகோதரத்துவம் உருவாகி உள்ளது. பழைய தொடர்புகள் போய் விட்டன. அல்லாஹ் புதிய சமுதாயத்தை உருவாக்கியுள்ளான். அதில் பணக்காரன், ஏழை, குழந்தைகள், வாலிபர்கள் வயோதிகர்கள் எல்லாரும் உள்ளனர். எனவே ஏழைகள் தமது கண்ணியத்துக்குரிய சகோதரர்களுக்கு மரியாதை செய்ய வேண்டும். செல்வந்தர்களின் கடமை அவர்கள் தமது ஏழைகளுக்காக உதவி செய்ய வேண்டும். அவர்களை பக்கீர்கள் என்றும் தாழ்ந்தவர்கள் என்றும் கருதக் கூடாது. எனவே அவர்களும் சகோதரர்கள் ஆவர். தந்தைகள் வெவ்வேறுவராக இருப்பினும் எல்லாருக்கும் ஆன்மீக தந்தை ஒருவர்தான். நீங்கள் ஒரே மரத்தின் கிளைகளாக இருக்கிறீர்கள். அன்னார் நமது சீர்திருத்தத் –திற்காக கிஷ்தி நூஹ் (நூஹின் கப்பல்) என்ற நூலைப் படிக்குமாறு கூறியுள்ளார்கள். அதனை மீண்டும் மீண்டும் படிக்குமாறு கூறியுள்ளார்கள்.

அவர்கள் கூறுகிறார்கள்: நான் மீண்டும் மீண்டும் எனது ஜமாஅத்துக்கு கூறியுள்ளேன். நீங்கள் என்னிடம் பைஅத் செய்து விட்டோம் என்று நம்பிக்கை கொண்டு விட வேண்டாம். அதன் உண்மை நிலை வரை நீங்கள் செல்லாத வரை ஈடேற்றம் இல்லை. தோலுடன் திருப்தி கொள்பவர் சத்தினை இழந்து விடுவார். உட்புறத்தால் உள்ளத்தை பெறாத வரை வெறும் வெளிப்படையானதை மட்டும் பார்ப்பது போதுமானதல்ல.

அவர்கள் கூறுகிறார்கள்: முரீது செயல்படுபவராக இல்லை எனில் முர்ஷித் உடைய சான்றான்மை மட்டுமே அவனுக்கு பலன் தராது. ஒரு வைத்தியர் ஒருவருக்கு மருந்து எழுதிக் கொடுத்தால் அதனை ஒரு மாடக்குழியில் வைத்து விட்டால் அது ஒருபோதும் பயன் தராது. டாக்டரிடம் சென்று எழுதி வாங்கி அதனை பயன்படுத்தாத –வரை நோய் சரியாகாது. அதேபோன்றுதான் ஆன்மீக நோயாளியின் நிலையும் ஆகும். கேட்டதை அமல்படுத்தவில்லை எனில் பயன் இல்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: ஒருபோதும் பயனில்லை. ஏனெனில் பயன் என்பது எழுதப்பட்டதைப் பயன்படுத்துவதன் விளைவு ஆகும். அதிலிருந்து அவர் தன்னைத்தானே விலக்கி வைத்து விட்டார். ஆகவே, நீங்கள் கிஷ்தி நூஹ் –ஐ மீண்டும் மீண்டும் வாசியுங்கள். அதற்கேற்ப உங்களை ஆக்குங்கள். قَدْ أَفْلَحَ مَنْ زَكّٰهَا தனது நஃப்ஸை தூய்மை ஆக்கியவர் வெற்றி பெற்று விட்டார். **(91:10)**

அவர்கள் கூறுகிறார்கள்: ஆயிரக்கணக்கான திருடர்களும் விபச்சாரர்களும் தீய செயல் உள்ளவர்கள், மது அருந்துபவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய உம்மத்தை சார்ந்தவர் என்று வாதம் செய்கின்றனர். உண்மையில் அவ்வாறா**?** ஒருபோதும் இல்லை. உம்மத்தை சேர்ந்தவர் என்றால் அவர்களின் போதனைகளின் படி முழுமையாக நடப்பவரே ஆவார்.

(மல்∴பூஸாத் தொகுதி 4 பக்கம் 232-233; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

பிறகு நூஹின் கப்பல் என்ற நூல் ஜமாஅத் மக்களைப் படிக்க வைக்கவும் அதற்காக கவனமூட்டுமாறும் கூறியவாறு கூறுகிறார்கள்: நூஹின் கப்பல் என்ற நூலில் எனது போதனைகளை நான் எழுதியுள்ளேன். அது ஒவ்வொருவருக்கும் புரிந்து இருப்பது அவசியமாகும். ஒவ்வொரு நகரத்திலும் உள்ள ஜமாஅத்தும் கூட்டம் நடத்தி இந்த நூலை அதில் படித்துக் காட்ட வேண்டும். தகுதியுள்ள அறிவுள்ள ஒருவரை அனுப்பி அவர் மூலம் படித்துக் காட்ட வேண்டும் வெறுமனே விநியோகம் செய்தால் **50** ஆயிரம் அளவுக்கு அதனை வெளியிட்டாலும் கூட போதுமானதல்ல. இந்த முறையில் இதனை செய்தால் ஒருமைப்பாடு ஜமாஅத்தில் உருவாகி விடும்.

(மல்∴பூஸாத் தொகுதி 3 பக்கம் 408-190; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது நூலான நூஹ் நபியின் கப்பல் என்ற நூலை மீண்டும் மீண்டும் படிக்குமாறு கட்டளை இட்டுள்ளார்கள். அதற்காக ஜமாஅத்தில் அதனை படிப்பதற்கு ஏற்பாடு இருக்க வேண்டும். அதுபோன்று MTA –விலும் அதனை படிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஒவ்வொருவரும் அதனை தமது வாழ்வில் அங்கமாக்க முயலவும் வேண்டும். ஒவ்வொருவரும் தாமும் படித்து அதனை வாழ்வின் அங்கமாக்க வேண்டும். அதற்கேற்ப செயல்படுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

தீமைகளில் இருந்து தப்புவதுதான் ஓர் அஹ்மதியின் அடையாளம் என்று குறிப்பிட்டவாறு கூறினார்கள்: உங்கள் பணி துஆ மற்றும் இஸ்திக்ஃபார் இறைவணக்கம் மனத்தூய்மையின் பக்கம் கவனம் செலுத்துதல் ஆகும். இவ்வாறு நீங்கள் உங்களை தகுதியுள்ளவராக்குங்கள். அல்லாஹ் வெகுமதிகள் மற்றும் அருள்களுக்கான வாக்குறுதிகளை எனக்கு தந்துள்ளான். அது சம்பந்தமாக முன்னறிவிப்புகள் நிறைவேறும் என்ற நிச்சய உறுதி உள்ளது. ஆனால் நீங்கள் அதிலிருந்து விலகி இருந்து விடக் கூடாது. பொறாமை, காழ்ப்புணர்ச்சி, குறை காணுதல், பெருமை, அகம்பாவம், கட்டுப்படாமை, பாவத்தின் வெளிப்படை வழிமுறைகள், சோம்பல், கவனமின்மை –களிலிருந்து தப்புங்கள். நினைவில் கொள்ளுங்கள். நல்ல முடிவு இறையச்சம் உள்ளவருக்கே உரியது. அல்லாஹ் கூறியது போன்று வல் ஆக்கிபத்துலில் முத்தகீன். எனவே இறையச்சமுள்ளவராக ஆவதற்காக கவலை கொள்ளுங்கள்.

(மல்∴பூஸாத் தொகுதி 3 பக்கம் 283; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

நல்ல முடிவு இறையச்சம் உள்ளவருக்குதான் கிடைக்கும்.

அல்லாஹ் நம்மை உண்மையான அஹ்மதியாவதற்கும் அன்னாரின் போதனையின் படி நடக்கும் வாய்ப்பும் தருவானாக. அல்லாஹ்வின் உரிமைகளையும் தருவோமாக. அவனது திருப்தியை பெறுவோமாக. நமது அறிவில் மேம்பட முயற்சி செய்பவர்கள் ஆவோமாக. அல்லாஹ்வின் அடியார்களின் உரிமையை செலுத்துபவர் ஆவோமாக. குறிப்பாக இந்த நாட்களில் நான் ஏற்கனவே சைகை செய்தது போன்று பாகிஸ்தானின் நிலைமைகளுக்காக துஆ செய்யுங்கள். பாகிஸ்தானியர் தாமும் துஆ செய்ய வேண்டும். அல்லாஹ் அவர்களை எல்லா விஷமங்களில் இருந்தும் பாதுகாப்பானாக. பொதுவாக நாட்டில் மவ்லவிகளால் ஏற்பட்டுள்ள குழப்பங்களில் இருந்து அல்லாஹ் நாட்டை பாதுகாப்பானாக. பொதுவாக உலகிற்காகவும் துஆ செய்யுங்கள். அது வேகமாக யுத்தத்தை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. ரஷ்யாவும் அமெரிக்காவும் யுத்தத்துக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றன. உள்ளபடி இரண்டும் தத்தமது பெருமையை நிலைநாட்ட விரும்புகின்றன. பெயர் நாங்கள் அநீதிகுள்ளானவர்களின் உரிமைகளை பெற்ற தர விரும்புகிறோம் என்பதாகும். உள்ளபடி இவர்கள் அநீதிக்கு உள்ளானர்களுக்கு உரிமைகளைத் பெற்று தரும் பெயரில் முஸ்லிம் நாடுகளை அழிக்க விரும்புகின்றனர்.

ஆகவே அல்லாஹ் முஸ்லிம்களுக்கு அறிவை தருவானாக. அவர்கள் இவர்களிடம் உதவி கேட்பதற்கு பதில் தாமே முடிவு எடுப்பவர்களாக ஆவார்களாக. பொதுமக்களின் உரிமைகளை வழங்குபவர்கள் ஆவார்களாக. பொதுமக்கள் தமது ஆட்சியாளர்களின் உரிமையை வழங்குபவர்களாக இருப்பார்களாக. இஸ்லாத்தின் பெயரால் தீவிரவாதம் செய்யும் இந்தக் கூட்டத்தினரை அல்லாஹ் பிடிப்பானாக. இரு பிரிவினருக்கும் அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக. எல்லாவற்றுக்கும் மேலாக காலத்தின் இமாமை ஏற்பார்காளாக. அவர்கள் தப்பிப்பதற்கு அதனை விட வேறு வழியில்லை. அதனை விட்டால் இவர்கள் எஞ்சி இருக்க வழியில்லை. தப்பிக்கவும் முடியாது. அல்லாஹ் இவர்களுக்கு அறிவு தருவானாக. முஸ்லிம்கள் இந்த அநீதியில் பங்கெடுப்பதற்கு பதிலாக இஸ்லாத்தின் உண்மையான போதனைக்கு ஏற்ப அன்பு, நேசம், சகோதரத்துவம் ஆகிய போதனையின்படி நடப்பார்களாக. அல்லாஹ்வின் உரிமையையும் வழங்குபவர்களாக ஆவார்களாக.

★ ★ ★ ★ ★

**அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பொருத்த வரையில் நாங்கள் எங்கு சென்றாலும் அன்பு, நேசம், அமைதி, சாந்தி ஆகியவற்றின் தூதுச் செய்தியையே வழங்குகின்றோம். இதுவே இஸ்லாத்தின் போதனையாகும். திருக்குர்ஆனின் போதனைக்கு ஏற்ப ஓர் அஹ்மதி பள்ளிவாயிலைப் பாதுகாப்பவராக இருப்பதுடன் கிறித்தவ ஆலயங்கங்களைப் பாதுகாப்பவராகவும் இருக்க வேண்டும். யூதர்களின் மடங்களைப் பாதுகாப்பவர்களாகவும் இருக்க வேண்டும். ஏனைய மதங்களின் வணக்கஸ்தலங்களைப் பாதுகாப்பவர்களாகவும் இருக்க வேண்டும். பள்ளிவாயிலைக் கட்டிய பிறகு நமது பள்ளிவாயிலைப் பாதுகாப்பது எவ்வாறு நமது கடமையாக இருக்கின்றதோ, அதன் தூய்மையை எவ்வாறு நாம் கருத்தில் கொள்வோமோ, அதன் சுற்றுச்சூழலை எவ்வாறு தூய்மையாக வைத்திருப்போமோ, அவ்வாறே நமது பகுதியில் மற்ற மதங்களின் வணக்கஸ்தலங்கள் இருந்தால், அவற்றைப் பாதுகாப்பதும் அவற்றின் சுற்றுச்சுழலைத் தூய்மையாக வைத்திருக்க முயற்சி செய்வதும் நம்மீது கடமையாக இருக்கின்றது. இஸ்லாத்தின் தோற்றுனரான ஹஸ்ரத் நபிகள் நாயகம் [ஸல்] அவர்கள், நாட்டுப்பற்று உங்களின் ஈமானின் ஒரு பகுதியாகும் என்று கூறியுள்ளார்கள். எனவே, ஓர் அஹ்மதி எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அந்த நாட்டின் மீது அன்பு கொண்டவாறு அதன் முன்னேற்றத்திற்காகப் பணியாற்ற வேண்டும். அத்துடன் அங்குள்ள மக்களுக்கு அன்பு, அமைதி, நேசம் ஆகியவற்றின் தூதுச்செய்தியை எட்ட வைப்பதுடன் அதைப் பரப்பவும் வேண்டும். பள்ளிவாயில் கட்டப்பட்ட பிறகு இங்கு வசிக்கின்ற அஹ்மதிகள் முன்னரை விட அதிகமாக இங்குள்ள மக்களுக்குரிய உரிமைகளைச் செலுத்துபவர்களாக இருப்பர் – இன்ஷா அல்லாஹுத்தஆலா.**

## ஏப்ரல் 2017 -ல் ஜெர்மனியிலுள்ள மார்பெர்க்கில் பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்படும் நிகழ்ச்சியில் ஸய்யிதுனா ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் நிகழ்த்திய எழுச்சிமிகு உரை

(அப்துல் மாஜித் தாஹிர், கூடுதல் வகீலுத் தப்ஷீர், இலண்டன் அவர்களின் அறிக்கை)

பத்ர் தொகுதி 2 இதழ் 50-ன் தொடர்ச்சி...)

**பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சி:**

ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஅலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் இந்த சொற்பொழிவு மாலை 6.00 மணியிலிருந்து 6.44 மணி வரை நீடித்தது. அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் துஆ செய்தார்கள். பிறகு ஹுஸூர் அவர்கள் அடிக்கல் நாட்டுகின்ற இடத்திற்குச் சென்றார்கள். துஆ செய்தவாறு முதல் கல்லை நட்டார்கள். பிறகு ஒருவர் பின் மற்றொருவராக கீழ்க்காணும் ஜமாஅத் பொறுப்பாளர்களுக்கும் விருந்தினர்களுக்கும் ஒரு கல்லை நடுவதற்கான நற்பாக்கியம் கிடைத்தது.

1. மதிப்பிற்குரிய அப்துல்லாஹ் சாஹிப் (ஜெர்மனி ஜமாஅத்தின் அமீர்)
2. டாக்டர் தாமஸ் ஸ்பைஸ் அவர்கள் (மார்பர்க் நகரின் லார்ட் மேயர்)
3. திருமதி. கிறிஸ்டன் பிரன்டட் அவர்கள் (பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் உள்ளூர் கமிஷ்னர்)
4. மதிப்பிற்குரிய அப்துல் மாஜித் தாஹிர் சாஹிப் (கூடுதல் வக்கீலுத் தப்ஷீர், இலண்டன்)
5. மதிப்பிற்குரிய ஹைதர் அலி ஸ. ்.பர் சாஹிப் (முபல்லிக் இன்சார்ஜ், ஜெர்மனி)
6. மதிப்பிற்குரிய முனீர் அஹ்மது ஜாவித் சாஹிப் (ஹுஸூர் அவர்களின் தனிச் செயலர்)
7. மதிப்பிற்குரிய ம. ்.ஸூத் அஹ்மத் அலவி சாஹிப் (மண்டல முஅல்லிம்)
8. மதிப்பிற்குரிய இ. ்.ப்திஹார் அஹ்மத் சாஹிப் (ஜெர்மனி மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ்வின் தலைவர்)
9. மதிப்பிற்குரிய ஹஸனாத் அஹ்மத் சாஹிப் (ஜெர்மனி மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் தலைவர்)
10. மதிப்பிற்குரிய அதியத்துன் நூர் அஹ்மத் ஹியூ பஷ் சாஹிபா (ஜெர்மனி லஜ்னா இமாயில்லாஹ்வின் தலைவி)
11. மதிப்பிற்குரிய மும்தாஸ் பார்டர் சாஹிப் (புதிதாக பைஅத் செய்தவர்களின் தர்பிய்யத்திற்கான தேசிய அளவிலான கூடுதல் செயலர்)
12. மதிப்பிற்குரிய முஸ. ்.ப்பர் அஹ்மது ஸ. ்.பர் சாஹிப் (மண்டல அமீர்)
13. மதிப்பிற்குரிய முஹம்மத் இல்யாஸ் சாஹிப் (மார்பர்க் ஜமாஅத்தின் தலைவர்)
14. மதிப்பிற்குரிய தாரிக் லத்தீ. ்.ப் பட்டி சாஹிப் (மார்பர்க் ஜமாஅத்தின் தர்பிய்யத் செயலர்)
15. மதிற்குரிய முஹம்மத் முனவர் அஹ்மத் சாஹிப் (மார்பர்க் மஜ்லிஸ் அன்சாருல்லாஹ் ஸயீம்)
16. மதிப்பிற்குரிய யாஸர் அயாஸ் சாஹிப் (மார்பர்க் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா காயித்)
17. மதிப்பிற்குரிய சௌபியா முனவ்வர் சாஹிபா (மார்பர்க் லஜ்னா இமாயில்லாஹ் தலைவி)
18. மதிப்பிற்குரிய முபாரக் சாபிர் சாஹிப் (மார்பர்க் ஜமாஅத்தின் உறுப்பினர்)

ஆகியோர் அடிக்கல் நாட்டினர். இறுதியில் ஹுஸூர் அவர்கள் மீண்டும் துஆ செய்தார்கள். அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் கூடாரத்திற்கு வந்தார்கள். அங்கு இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் ஹுஸூர் அய்யதஹுல்லா -ஹுத்தஅலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களுடன் அமர்ந்து உணவு உண்டனர். பள்ளிவாயிலுக் -கான அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சியும் இரவு உணவிற்கான நிகழ்ச்சியும் 7:30 மணி வரை நீடித்தது. அதற்குப் பிறகு சில விருந்தினர்கள் ஹுஸூர் அவர்களைச் சந்தித்தனர். ஹுஸூர் அவர்களுடன் முஸா. ்.பா செய்யும் நற்பேறு பெற்றனர். ஹுஸூர் அவர்கள் அந்த விருந்தினர் -களுடன் உரையாடினார்கள். அதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் கூடாரத்தை விட்டு வெளியில் வந்தார்கள். அங்கு குழந்தைகள் முதலிலேயே வரிசையாக நின்று கொண்டிருந்தனர். அந்த எல்லா குழந்தைகளுக்கும் ஹுஸூர் அவர்கள் மிகுந்த பணிவுடன் சாக்லேட் வழங்கினார்கள்.

**பெண்களின் கூடாரத்தில் ஹுஸூர் அவர்களின் வருகை:**

பிறகு, ஹுஸூர் அவர்கள் லஜ்னாக்கள் இருந்த கூடாரத்திற்குச் சென்றார்கள். அங்கிருந்த எல்லாப் பெண்களும் ஹுஸூர் அவர்களை நேரில் காணும் நற்பேற்றைப் பெற்றார்கள். சிறுமிகள் துஆக்கள் அடங்கிய கவிதைகளையும் கூட்டுப் பாடல்களையும் பாடினர். ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் சிறுமிகளுக்கும் சாக்லேட் வழங்கினார்கள். அதற்குப் பிறகு நிகழ்ச்சிக்கேற்ப 7:40 மணிக்கு இங்கிருந்து பிராங்க்பெர்ட்டில் உள்ள பைத்துஸ் ஸுபூஹ் பள்ளிவாயிலுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். ஹுஸூர் அவர்கள் திரும்பிச் செல்லும்போதும் அரசு காவல்துறையின் வண்டிகள் முழு குழுவிற்கும் பாதுகாப்பு வழங்கும் வகையில் ஹுஸூர் அவர்களின் காருடன் இணைந்து சென்று கொண்டிருந்தது. ஏறக்குறைய 45 நிமிடங்கள் பயணம் செய்த பிறகு 8:25 மணிக்கு ஹுஸூர் அவர்கள் பைத்துஸ் ஸுபூஹ் பள்ளிவாயிலுக்கு வந்தடைந்தார்கள். 8:45 மணிக்கு ஹுஸூர் அவர்கள் மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை சேர்த்துத் தொழ வைத்தார்கள். தொழுகைகளை நிறைவேற்றிய பிறகு ஹுஸூர் அவர்கள் தமது தங்குமிடத்திற்குத் திரும்பிச் சென்றார்கள்.

**விருந்தினர்களின் தாக்கங்கள்:**

இன்று பள்ளிவாயில் அடிக்கல் நாட்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பல விருந்தினர்களும் தமக்கு ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி எடுத்துக் கூறியிருந்தனர். ஹுஸூர் அவர்களின் சொற்பொழிவு விருந்தினர்களின் மீது ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது. விருந்தினர்களால் அதை வெளிப்படுத்தாமல் இருக்க முடியவில்லை.

ஒரு விருந்தினரான திருமதி. F. Edith அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "அண்டை வீட்டுக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாக கலீ. ்.பா அவர்களின் தூதுச் செய்தி என்னை மிகுந்த தாக்கத்திற்கு ஆளாக்கி விட்டது. ஒரு கிறித்தவர் என்ற நிலையில் கிறித்தவர்களும் இந்த போதனையைக் கடைபிடிக்க வேண்டும் என்பது விருப்பமாகும்."

இன்னொரு விருந்தினரான திரு. மார்டன் அவர்கள் இவ்வாறு கூறினார்: "கலீ. ்.பா அவர்கள் பெண்களுக்கான அந்தஸ்து தொடர்பாக கூறிய விஷயம் ஓர் அழகிய மார்க்கப் போதனையாக இருக்கின்றது. ஏனைய முஸ்லிம் பிரிவினர்களிடம் காணப்படும் நாகரிகத்தைப் பார்க்கும்போது, பெண்கள் மன அழுத்தத்திற்கு ஆளாகி இருப்பதை என்னால் உணர முடிகிறது. அவர்கள் முழுமையான முறையில் தங்களது கணவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருப்பது தெரிய வருகிறது. ஆனால், நீங்கள் ஆண்கள் மற்றும் பெண்களின் உரிமைகளைப் பேணுவதிலும் அவளுக்குரிய அந்தஸ்தை வழங்குவதிலும் நடுநிலையுடன் நடந்து கொள்வது எனக்கு மிகவும் பிடித்தமானதாக இருக்கிறது."

இன்னொரு விருந்தினரான W. Barbara அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "எனக்கு இந்த

நிகழ்ச்சி மிகவும் பிடித்திருந்தது. அடிக்கல் நாட்டுவதற்காக கலீ∴பா அவர்கள் நேரடியாக வந்தது மிகவும் பெருமிதம் கொள்ளத்தக்க ஒரு விஷயமாகும். இந்த விஷயம் இத்துடன் நின்று விடவில்லை. மாறாக, கலீ∴பா அவர்களுக்கு மக்கள் கண்ணியமளிக்கின்ற வட்டமானது இதை விட மிகவும் விரிவாக இருக்கின்றது. கலீ∴பா அவர்கள் ஜமாஅத்திலுள்ள ஏனைய உறுப்பினர்-களுக்கும் பெண்களுக்கும் கூட அடிக்கல் நாட்டுவதற்கான வாய்ப்பை வழங்கி இந்த கண்ணியத்தை அவர்களுக்கும் வழங்கியுள்ளார்கள். நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையின் இந்த சூழலானது எனது உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது."

இன்னொரு விருந்தினரான திருமதி. Julia அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "மிகவும் சிறந்த முறையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, கலீ∴பாவின் சொற்பொழிவில் கூறப்பட்டிருந்த விஷயங்கள் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அடியார்களுக்குரிய உரிமைகளைச் செலுத்தாமல் இறைவனை வணங்குவதில் என்ன அர்த்தம் இருக்கின்றது? என்று அவர்களது கேள்வி என்னை மிகவும் கவர்ந்தது. நான் இந்த நிகழ்ச்சிக்கு வருவதற்கு முன்னதாக இஸ்லாம் பழமைவாதம் மற்றும் தீவிரவாதத்தின் போதனையை வழங்குகின்றது என்பதே எனது கருத்தாக இருந்தது. ஆனால், இன்றைய நிகழ்ச்சியானது எனது மூளையை இஸ்லாம் தொடர்பாக எனக்கு இருந்து வந்த எதிர்மறையான சிந்தனையிலிருந்து தூய்மைப்படுத்தி விட்டது. நான் இஸ்லாத்தின் அமைதி மற்றும் அன்பின் போதனையை சிறந்த முறையில் புரிந்து கொண்டேன். உங்களது ஜமாஅத் மிகச் சிறந்த முறையில் தன்னைத் தீவிரவாத்திலிருந்தும் சீர்குலைந்துபோன இஸ்லாமிய சிந்தனைகளிலிருந்தும் விலக்கி வைத்தவாறு தன்னைப் பாதுகாத்துக் கொள்வதில் வெற்றி பெற்று விட்டது."

பொருளாதார நிபுணரான திருமதி டாக்டர் Brunn அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: "கலீ∴பா அவர்களின் சொற்பொழிவில் எனக்கு கிறித்துவ மார்க்கத்தில் காணப்படுகின்ற அன்பு பற்றிய உண்மையான போதனை தென்படுகின்றது. அன்னாரது சொற்கள் முழு உலகிலும் பரப்பப்பட வேண்டும்."

Rauschnberg நகரத்தின் செயல் மேயரான திரு. Manfred Gunther அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "நிகழ்ச்சியில் கலந்து கொண்டதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி ஏற்பட்டது. மேலும் கலீ∴பாவின் சொற்பொழிவினால் நான் மிகவும் தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன்."

பேராசிரியர் டாக்டர் Brunn அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "கலீ∴பாவின் சொற்பொழிவில் அவர்கள் கூறிய கருத்துகளை நானும் ஏற்றுக் கொள்கிறேன். ஏனென்றால், அவர்கள் கூறியவை கிறித்தவத்தில் காணப்படுகின்ற நல்லொழுக்கக் கொள்கைகளை ஒத்தாக இருக்கின்றன. எங்களது மாநிலத்தின் முதலமைச்சர் அவர்களை ஹுஸுர் அவர்கள் சந்திக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்."

செஞ்சிலுவைச் சங்கத்தின் சட்ட ஆலோசகராக இருந்த ஒருவர் ஹுஸுர் அவர்களின் சொற்பொழிவிற்குப் பிறகு இவ்வாறு கூறினார்: "கலீ∴பா அவர்களை நான் எனது தந்தை போல உணர்கிறேன்."

இன்னொரு விருந்தினரான திருமதி. Barbara Buse அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "கலீ∴பா அவர்களின் தூதுச்செய்தி இன்றைய இருள் நிறைந்த உலகில் வானத்தில் தென்படுகின்ற ஒரு தீபத்தைப் போன்று விளங்குகிறது. மனிதத் தன்மை பற்றி கலீ∴பா அவர்கள் பேசியபோது எனது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தோடியது. இத்தகைய உயர்ந்த அந்தஸ்தை உடைய பெருந்தகை ஒருவர் நமக்கிடையில் இருப்பது நமக்கு மிகவும் கண்ணியத்தை வழங்கக் கூடியதாகும்."

இவருக்கு ஹுஸுர் அவர்களைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பமும் கிடைத்தது. சந்திப்பிற்குப் பிறகு அவர் இவ்வாறு கூறினார்: "எனது முழு உடலும் உள்ளமும் நடுங்கிக் கொண்டிருக்கிறது. நான் எனது உணர்வுகளை வார்த்தைகளால் கூற முடியாது. இந்த பெருந்தகை போப் போன்றவர் அல்ல. மாறாக, அவரிலிருந்தும் முற்றிலும் மாறுபட்டவராக இவர் இருக்கிறார். இவர்களிடத்தில் பணிவையும் தாழ்மைக் குணத்தையும் பார்க்க முடிகிறது."

ஒரு பெண் விருந்தினரான திருமதி. Claudia Heerklotz அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "கலீ∴பா அவர்களின் சொற்பொழிவினால் நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். மிகச் சிறந்த சொற்பொழிவை அவர்கள் நிகழ்த்தினார்கள். மனிதர்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்து-வதற்கான இஸ்லாத்தின் போதனைகள் என்னிடத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது."

இன்னொரு விருந்தினரான திரு. Micheal Platen அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "நான் இங்குள்ள நர்சரி பள்ளியில் பணிபுரிகின்றேன். நான் இங்கு வந்தபோது, இன்று மாலைக்குள் இங்கு நடைபெறும் பணிகள் நிறைவு பெறாது என்றும், இந்த இடத்தை அடிக்கல் நாட்டும் நிகழ்ச்சிக்காக ஆயத்தப்படுத்துவதற்கு மேலும் மூன்று வாரங்கள் தேவைப்படும் என்றும் நான் கருதினேன். ஆனால் இவ்வளவு விரைவாக எல்லா பணிகளும் நிறைவடைந்திருப்பதைப் பார்த்து நான் மிகவும் வியப்படைந்தாலும் பணி நிறைவு எட்டியதை ஒட்டி நான் மகிழ்ச்சியும் அடைகின்றேன். கலீ∴பா அவர்களின் சொற்பொழிவு மிகவும் சிறப்பாக இருந்தது. அதில் பல கருத்துகள் கூறப்பட்டன. மத நல்லிணக்கம் தொடர்பாக இஸ்லாம் கூறும் போதனைகளைக் கேட்டு நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். இத்தகைய போதனைகளையுடைய வேறு எந்த மதத்தையும் என்னால் தெரிந்து கொள்ள முடியவில்லை. அவற்றில் ஒவ்வொரு மதமும் தனது எல்லைக்குள் மட்டுமே இருந்து வருகிறது. மற்ற மதங்களுடன் தொடர்பை உருவாக்குவதற்கு எந்த முயற்சியையும் அவர்கள் செய்யவில்லை."

மார்பர்க் நகரில் அரசு ஊழியராகப் பணி புரியும் ஒருவர் இவ்வாறு கூறினார்: "ஹுஸுர் அவர்கள் மனிதர்களுடன் அன்பு செலுத்துவது தொடர்பான எல்லா அம்சங்களையும் விளக்கிக் கூறியது எனது உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. அண்டை வீட்டுக்காரர்களுக்குச் செலுத்த வேண்டிய உரிமைகள் உண்மையிலேயே ஒரு கிறித்தவன் என்ற நிலையில் எனக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகத் தெரிகிறது. இங்கு வந்திருந்த ஒவ்வொரு நபரும் கலீ∴பத்துல் மஸீஹை பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்தில் இருந்ததை என்னால் உணர முடிந்தது."

மார்பர்க்கின் டே கேர் ∴பெஸிலிடி சென்டரின் மேனேஜிங் டைரக்டர் அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "முஸ்லிம் ஜமாஅத்துகளில் எவருக்காவது பள்ளிவாயில் கட்டுவதற்கான அனுமதி வழங்க வேண்டுமென்றால் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு மட்டுமே அனுமதி வழங்க வேண்டும்."

நகர மேயரின் அலுவலகத்தில் வேலை செய்து வந்த ஒருவர் இவ்வாறு கூறினார்: "நான் எந்த விருப்பங்களுடன் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டேனோ அவை பற்றியே கலீ∴பா அவர்களும் கூறினார்கள். அன்பு செலுத்த வேண்டும் என்பதே ஹுஸுர் அவர்களின் தூதுச் செய்தியாக இருந்தது. நான் ஹுஸுர் அவர்களின் சொற்பொழிவின் மொழியாக்கத்தை ஒரு காது வழியாகவும், இன்னொரு காது வழியாகவும் ஹுஸுர் அவர்களின் அசல் சொற்களையும் கேட்டுக் கொண்டிருந்தேன். ஹுஸுர் அவர்களின் அசல் குரலும் எனது காதுகளை வந்தடைய வேண்டும் என்பதற்காக அவ்வாறு செய்தேன். ஹுஸுர் அவர்களின் குரலிலும் கூட மிகுந்த அன்பும் அமைதியும் தூதுச் செய்தியும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது."

வயதில் பெரியவரான ஒரு விருந்தினர் ஹுஸுர் அவர்கள் வருவதற்கு முன்னதாக எனக்கு 6:30 மணிக்கு ஒருவரைச் சந்திக்க வேண்டியது உள்ளது. எனவே நான் கலீ∴பாவின் சொற்பொழிவைக் கேட்க முடியாத நிலை இருக்கின்றது என்று கூறினார். அந்த விருந்தினருக்கு அருகில் அமர்ந்திருந்த நண்பர் இவ்வாறு கூறுகின்றார்: "ஹுஸுர் அவர்களின் சொற்பொழிவை அவர் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார். 6:30 மணி ஆனபோது என்னைப் பார்த்து அவர் கலீ∴பா அவர்களின் சொற்பொழிவு மிகவும் சிறப்பாக இருக்கிறது. அதைக் கேட்டு நான் மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். ஆனால் இப்போது நான் செல்ல வேண்டியுள்ளது என்று என்னிடம் கூறி விட்டு தனது ஹெட்போனைக் சுழற்றி வைத்து விட்டார். எனக்கு இதனால் இன்னும் அதிகமான கவலை ஏற்பட்டது. ஏனென்றால், நாங்கள் இருவருமே ஹுஸுர் அவர்களுக்கு முன்னால் இருந்த மேஜைக்கு அருகில் அமர்ந்திருந்தோம். இந்த நண்பர் முன்பகுதியில் இருந்து எழுந்து அவமரியாதை ஏற்பட்டு விடும் என்று வருத்தம் எனக்கு ஏற்பட்டது. ஆனால், திடீரென்று அவரது உள்ளத்தில் என்ன தோன்றியது என்பதை அல்லாஹ்வே நன்கு அறிவான். அவன் மீண்டும் தனது ஹெட்போனை எடுத்து தனது காதுகளில் பொருத்திக் கொண்டார். ஹுஸுர் அவர்களின் சொற்பொழிவை முழுமையாகக் கேட்டு விட்டே அவர் சென்றார். செல்லும்போது நன்றி தெரிவித்தார். மேலும் இன்று வரை இது போன்ற சிறந்த மார்க்க நிகழ்ச்சியை, தான் கண்டதில்லை என்றும், கலீ∴பா அவர்களின் சொற்பொழிவு என்னை மிகுந்த தாக்கத்திற்கு ஆளாக்கி விட்டது என்றும் அவர் கூறினார்."

பின்லாந்து நாட்டுடன் தொடர்புடைய ஒரு பெண்மணி ஒன்பது வயது நிரம்பிய தனது மகனுடன் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவர் இவ்வாறு கூறினார்: "நான் எனது சிறிய மகனை என்னுடன் அழைத்து வந்துள்ளேன். எனது மகனின் காதுகளையும் கலீ∴பத்துல் மஸீஹின் குரல் சென்றடைய வேண்டும் என்பது எனது உள்ளத்தில் உள்ள விருப்பமாகும். அவர்கள் கூறுகின்ற போதனைகளிலிருந்து சிலவற்றையாவது அவன் கற்றுக் கொள்ள வேண்டும். மேலும், உங்களைப் போன்று இறைவனுக்குப் பிரியமான நல்ல மனிதனாக அவன் உருவாக வேண்டும். கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் மேடைக்கு வந்ததும் ஒருவேளை உங்களது கலீ∴பா கடுமையான இயல்பை உடையவராக இருப்பார் என்று எனக்குத் தோன்றியது. ஆனால் அவர்களோ மிகவும் மென்மையான, நிம்மதி நிறைந்த இயல்பை உடையவர்களாக இருப்பது தெரிய வந்தது. நான் கலீ∴பா அவர்களின்

சொற்பொழிவைக் கேட்டு மிகுந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன். எனது பார்வையில் அவர்கள் கூறுவதே உண்மை இஸ்லாமாகும். ஏனைய எல்லா முஸ்லிம்களும் அவர்களுக்கு பின்னால் செல்ல வேண்டும். குறிப்பாக கலீ∴பா அவர்கள் மனிதர்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பாகவும் அண்டை வீட்டுக்-காரர்களுக்குரிய உரிமைகள் தொடர்பாகவும் இஸ்லாம் கூறுகின்ற கருத்துகளை எடுத்துக் கூறியபோது, அது என் மீது மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்களது இந்த தூதுச்செய்தியும் இந்த போதனைகளும் ஒருபோதும் தவறானதாக இருக்க முடியாது. உங்கள் ஜமாஅத்தைச் சார்ந்த ஏதாவதோர் இமாம் அல்லது ஏதாவதொரு நபர் எனது இந்த மகனுக்கு திருக்குர்ஆனை ஓதக் கற்றுக் கொடுக்க வேண்டும் என நான் விரும்புகின்றேன். இவன் திருக்குர்ஆனை ஓதி நல்ல இயல்புள்ள ஒரு சிறுவனாக ஆக வேண்டும்."

லார்டு மேயர் அவர்கள் தமது தாக்கத்தை இவ்வாறு வெளிப்படுத்தி கூறினார்: "கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் ஞானம் நிறைந்த ஒரு மனிதராக இருக்கின்றார் என்று எனக்குத் தோன்றியது. கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவு மிகவும் அழகாக இருந்தது. அவர்களிடம் காணப்படுகின்ற அமைதியை விரும்புகின்ற பண்பானது அவர்களது சொற்பொழிவிலுள்ள கருத்தை உண்மைப்படுத்துவதாக இருக்கின்றது. முஸ்லிம்கள் மீது இந்த அளவு தவறான குற்றச்சாட்டுகள் சுமத்தப்படுவது மிகவும் வேதனைக்குரிய விஷயமாக இருக்கின்றது. முஸ்லிம்களுக்கு பதில் கூறுவதற்கு இதற்காக ஆதாரங்களைக் கொடுக்க வேண்டியது வருகிறது. ஆனால், அதே சமயத்தில் மேற்கத்திய உலகைச் சார்ந்த ஒரு நபரோ அல்லது ஒரு கிறித்தவரோ அநீதியான ஒரு செயலைச் செய்தால் இது அவர் சார்ந்துள்ள மதத்திலுள்ள குறையாகும் என்று எவரும் கூறுவதில்லை. உதாரணமாக, நார்வேயில் கிறித்தவத்தின் பெயரால் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். ஆனால் எவருமே இது கிறித்தவ மதத்திலுள்ள குறையாகும் என்று அதைப் பற்றி விமர்சனம் செய்வதில்லை."

மாநில M.P ஆன மதிப்பிற்குரிய Kerstin அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களை வரவேற்பதற்கான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது மிகவும் கண்ணியத்திற்குரிய விஷயமாகும். அவர்களைச் சந்திப்பதற்கான சந்தர்ப்பமும் எனக்குக் கிடைத்தது. கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் மிகவும் புரியும் திறன் கொண்ட மனிதராக இருக்கின்றார்கள். அவர்கள் பேசுவதற்கான சொற்களை மிகவும் ஞானத்துடன் தேர்ந்தெடுக்கின்றார்கள். அவர்களிடத்தில் அமைதியையும் நிம்மதியையும் உணர முடிகிறது. அவர்கள் மிகவும் நல்லிணக்கம் கொண்ட மற்றும் இறையாண்மை உடைய மனிதராக இருக்கின்றார்கள்."

மார்பர்க் பல்கலைக்கழகத்தில் இலக்கியப் பேராசிரியரான ∴பிலி∴ப் அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்: "இந்த நிகழ்ச்சி மிகவும் வெற்றிகரமானதாக இருந்தது. கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் மிகவும் அகப்பார்வை உள்ள மனிதராக இருக்கின்றார்கள். அவர்களைப் பார்க்கும்போது, அவர்கள் மிகவும் ஆழமான சிந்தனை உடையவர்கள் என்பது தெரிய வருகிறது. அவர்கள் எதைக் கூறினாலும் அதற்கேற்ப அவர்களும் செயல்படுகின்றார்கள் என்பது தெரிய வருகிறது. கலீ∴பத்துல் மஸீஹின் கூற்றுக்களை சட்ட நூல்களில் இடம் பெறச் செய்ய வேண்டும்."

இன்னொரு பெண் விருந்தினரான Simone Luly அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களிடம் ஒரு குறிப்பான திகில் நிறைந்த தோற்றம் இருக்கிறது. கலீ∴பத்துல் மஸீஹ் அவர்களிடம் ஒரு குறிப்பான திகில் நிறைந்த தோற்றம் நல்லிணக்கம் தொடர்பாக தமது கருத்துக்களை கூறும்போது எவரும் இஸ்லாத்தைப் பார்த்து அஞ்ச வேண்டிய தேவை இல்லை என்று கூறினார்கள். எனக்கு அவர்கள் கூறிய இந்த விஷயத்தால் மிகவும் ஆழமான தாக்கம் ஏற்பட்டது."

இன்னொரு விருந்தினரான Maximillion அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "இந்த நிகழ்ச்சியில் குடும்பத்துடன் இருக்கின்ற சூழல் எனக்குக் கிடைத்திருக்கின்றது. கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் மிகவும் அமைதி நிறைந்த மனிதராக இருப்பது தெரிய வருகின்றது. அவர்களுக்கு தமது மனதிலுள்ளதை சிறந்த முறையில் எடுத்துக் கூற முடிகின்றது. அவர்களது சொற்பொழிவிலுள்ள மிக முக்கியமான விஷயம் இதுவாகும். எல்லாரும் பரஸ்பரம் ஒருவர் மற்றவருக்கிடையில் அமைதியுடனும் நல்லிணக்கத்துடனும் நடந்து கொள்ளுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்தால் எல்லாமே சரியாகி விடும்."

இன்னொரு விருந்தினரான Wieland Stotcle அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "இங்கு நட்பு ரீதியான சூழல் நிலவுகிறது. இவர்கள் விருந்தினர்களை வரவேற்கும் வழிமுறையை நான் மிகவும் விரும்புகிறேன். சொற்பொழிவு உடனுக்குடன் மொழிபெயர்ப்பு செய்யப்படுவது என்னிடம் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது."

இன்னொரு பெண் விருந்தினரான Metzger அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: "இந்த நிகழ்ச்சிக்கான அழைப்பு எனக்கு வழங்கப்பட்ட போது, ஒரு பெண் எவ்வாறு இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள முடியும் என்ற தயக்கம் ஆரம்பத்தில் எனக்கு ஏற்பட்டது. ஆனால் இங்கு வந்த பிறகு நிலைமை முற்றிலும் மாற்றமாக இருந்ததை நான் உணர்ந்தேன். எனக்கு இங்கு அமைதி கிடைத்தது. நான் வசிக்கும் நகரத்தில் துருக்கி சமுதாயத்தைச் சார்ந்த சில நபர்கள் உள்ளனர். அவர்கள் சமுதாயத்தை விட்டும் தங்களைத் தனிமைப்படுத்திக் கொள்கின்றனர். கலீ∴பா அவர்கள் மிகவும் மென்மையான உள்ளத்தை உடையவராக இருப்பதை உணர முடிகிறது. அவர்கள் கூறும் கருத்து மிகவும் சிறப்பாக இருக்கின்றது. கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் அமைதி மற்றும் ஒற்றுமை பற்றி கூறிய விஷயங்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களாகும். அவற்றைப் பின்பற்றுவதன் மூலமாகவே சமுதாயத்தில் சிறந்த நிலையை உருவாக்க முடியும்."

ஒரு முஸ்லிம் நண்பர் இந்நிகழ்ச்சியின் போது இரண்டாவது வரிசையில் அமைதியாக அமர்ந்திருந்தார். அவர் ஹுஸுர் அவர்களின் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தார். அதற்குப் பிறகு ஹுஸுர் அவர்களை முஸா∴பா செய்கின்ற நற்பேறு அவருக்குக் கிடைத்தது. ஹுஸுர் அவர்களைச் சந்தித்ததில் அவருக்கு எந்த அளவு தாக்கம் ஏற்பட்டது என்றால் அவரால் தமது உணர்வுகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. தன்னையும் அறியாமல் அவரது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது. என்னைப் போன்ற ஓர் எளிய மனிதனுக்கு இத்தகைய மகத்தான ஒரு மனிதருடன் கை குலுக்குவதற்கான கண்ணியம் கிடைத்திருக்கின்றது. எனது உணர்வுகளை எடுத்துக் கூறுவதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை என்று அவர் கூறினார்.

**மின்னணு மற்றும் அச்சக ஊடகங்களில் கவரேஜ்:**

மார்பர்க் பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டப்பட்ட நிகழ்ச்சிக்கு ஜெர்மனியிலுள்ள மின்னணு மற்றும் அச்சக ஊடகங்கள் விரிவான முறையில் கவரேஜ் வழங்கியுள்ளது. இந்த மின்னணு மற்றும் அச்சக ஊடகங்களின் விபரங்களும் அதன் மூலம் எத்தனை நபர்கள் வரை பள்ளிவாயிலுக்கான அடிக்கல் நாட்டுகின்ற நிகழ்ச்சி பற்றிய செய்தி சென்று சேர்ந்தது என்பதை கீழே தருகின்றோம்.

ஒரு டிவி சேனல் மூலமாகவும் 22 பத்திரிகைகள் மூலமாகவும் இந்நிகழ்ச்சி பற்றிய 26 செய்திகள், ஒரு கோடியே 89 இலட்சத்து 90 ஆயிரத்து 789 நபர்கள் வரை சென்று சேர்ந்தன. இது பற்றிய விபரம் பின்வருமாறு:

| தொலைக்காட்சி சேனலின் பெயர் | தூதுச் செய்தி சென்றடைந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| Rheinland Pfalz / Hessen | |
| பத்திரிகைகளின் பெயர்கள் | தூதுச் செய்தி சென்றடைந்தவர்களின் எண்ணிக்கை |
| Allgemeine Zeitung | 174158 |
| Arcor | 1274500 |
| Bild.de | 9132186 |
| Echo online | 146620 |
| FAZ.Net | 3833239 |
| Focus online | 3956478 |
| Gelnhauser Tageblatt | 778 |
| Giebener Anzeiger Hochster Kreisblatt | 46296 |
| Kreis-Anzeiger | 7191 |
| Lauterbacher Anzeiger | 529 |
| Mittelhessen.De | 44135 |
| Nassauische Neue Presse | |
| Nau Isenburger Neue Press | |
| Oberhessische Presse | 33579 |
| Oberhessische Zeitung | 12445 |
| Russelsheimer Echo | |
| Schwabische.de | 220110 |
| Taunus Zeitung | |
| Usinger Anzeiger | 1814 |
| Widsbadener Kurier | 83920 |
| Wormser Zeitung | 22929 |
| மொத்தம் | 18990907 |

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 17 May 2018 Issue No. 20

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஆன்லைன் பத்திரிகையான schwaebische.de தனது இணையதள பதிப்பில் "மென்மையான இயல்புடைய கலீ∴பா பள்ளிவாயிலைத் திறந்து வைத்தார்"என்று தலையங்கச் செய்தியில் வெளியிட்டிருந்தது.

Allgemeine zeityng mainz என்ற பத்திரிகை 18 ஏப்ரல் 2017 -ன் பதிப்பில் "அஹ்மதிகள் இரு புதிய பள்ளிவாயில்களைக் கட்டுவர்" என்ற தலையங்கத்தின் கீழ் இந்த செய்தியை வெளியிட்டது. "அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் Hessen மாநிலத்தில் இரண்டு புதிய பள்ளிவாயில் - களைக் கட்டவிருக்கின்றது. ஜமாஅத்தின் இமாமான (ஹஸ்ரத்) மிர்ஸா மஸ்ரூர் அஹ்மத் அவர்கள் செவ்வாய்க்கிழமை அன்று மாலை ரூன் ஹாயிமில் ஒரு மினாராவைக் கொண்ட பள்ளிவாயிலுக்கான அடிக்கல்லை நாட்டினார்கள். புதன்கிழமை அன்று கலீ∴பா அவர்கள் மார்பர்க்கில் கட்டப்பட்டுள்ள பள்ளிவாயிலுக்கான அடிக்கல்லை நாட்டுவதற்காக வருகை தர இருக்கின்றார்கள். கடந்த வெள்ளிக்கிழமையன்று ரூன் ஹாயிமில் ஆயிரக்கணக்கான அஹ்மதிகள் ஜமாஅத்தின் கலீ∴பாவின் பின்னால் நின்றவாறு ஜு்முஆ தொழுகையை நிறைவேற்றினர். கலீ∴பா அவர்கள் இலண்டனில் வசித்து வருகின்றார்கள். உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அறிக்கைக்கு ஏற்ப அஹ்மதிகளின் எண்ணிக்கை பல மில்லியன்களைக் கொண்டதாகும். ஜெர்மனியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உறுப்பினர்களின் எண்ணிக்கை 45 ஆயிரம் ஆகும். இவர்களில் 15 ஆயிரம் பேர் Hessen மாநிலத்தில் வசித்து வருகின்றனர். இந்த செய்தியை ஜெர்மனி ஜமாஅத்தின் அமீர், கலீ∴பா அவர்கள் வருகை தந்த சமயத்தில் செய்தியாளர் -களிடம் தெரிவித்தார்கள். ஜெர்மனியில் இந்த ஜமாஅத் 51 பள்ளிவாயில்களைக் கட்டியுள்ளது. அவற்றில் பாதி பள்ளிவாயில்கள் Hessen மாநிலத்தில் உள்ளன. முதல் பள்ளிவாயில் Humburg -ல் 1954 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இரண்டாவது பள்ளிவாயில் 1959 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. அது நூர் பள்ளிவாயில் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. பிராங்க்∴பொர்ட்டில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தலைமையகம் இயங்கி வருகிறது. இந்த ஜமாஅத் ஜெர்மனியில் மொத்தம் 100 பள்ளிவாயில்களைக் கட்டுவதற்கான திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இப்போது ஏறக்குறைய 10 பள்ளிவாயில்களுக்கான கட்டுமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன." இவ்வாறே ஏனைய பல பத்திரிகைகளும் இந்நிகழ்ச்சி தொடர்பாக விரிவான செய்திகளை வெளியிட்டிருந்தன.

(தொடரும்...)

(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)

முன்னறிவிப்பும் இங்கு வந்து முடிந்து போகின்ற அந்த நேரமாக இது இருக்கின்றது. எனவே, உண்மைக்காக மற்றும் தொண்டு செய்வதற்காக மனித இனத்திற்கு வழங்கப்பட்டிருக்கின்ற இறுதி சந்தர்ப்பமாக இது இருக்கின்றது. இப்போது இதற்குப் பிறகு வேறு எந்த சந்தர்ப்பமும் கிடைக்காது. இந்த சந்தர்ப்பத்தை இழந்து விடுபவர் பெரும் துர்பாக்கியசாலியாக இருக்கின்றார்.

வெறுமனே நாவளவில் பைஅத்தின் உறுதிமொழியைக் கூறுவது ஒன்றுமே அல்ல. மாறாக, அல்லாஹ் உங்களை உண்மையாளராக ஆக்குவதற்கு முயற்சி செய்யுங்கள். அதற்காக அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள். இதில் சோம்பேறித்தனத்துடன் நடந்து கொள்ளாதீர்கள். மாறாக, சுறுசுறுப்பாக செயல்படுபவர்களாக ஆகி விடுங்கள். நான் எடுத்துக் கூறியுள்ள இந்த போதனைக்கு ஏற்ப செயல்பட முயற்சி செய்யுங்கள். நான் எடுத்துக் கூறியுள்ள வழியில் செல்லுங்கள். அப்துல் லத்தீ∴ப் அவர்களின் முன்மாதிரியை எப்போதும் கருத்தில் கொள்ளுங்கள். அவர்களிடமிருந்து எவ்வாறு உண்மையாளர்கள் மற்றும் நன்றியுணர்வுள்ளவர்களின் அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன. இந்த முன்மாதிரியை இறைவன் உங்களுக்காக எடுத்துக் காட்டியுள்ளான். எப்போதும் சிந்தித்துக் கொண்டே இருங்கள். இந்த உலகம் சில நாட்களுக்கு உரியதாகும். ஒரு நாள் வர இருக்கின்றது. அப்போது நாமும் இருக்க மாட்டோம். நீங்களும் இருக்க மாட்டீர்கள். வேறு யாரும் இருக்க மாட்டார்கள். இந்த எல்லா காடுகளும் பாழடைந்து விடும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணத்திற்குப் பிறகு மதீனாவின் நிலைமை எவ்வாறு ஆகிவிட்டது? ஒவ்வொரு நிலைமையிலும் மாற்றம் இருக்கின்றது. எனவே, அந்த மாற்றத்தைக் கருத்தில் கொள்ளுங்கள். இறுதி நேரத்தை எப்போதும் நினைவில் வைத்திருங்கள். வருங்காலத் தலைமுறையினர் உங்களது முகத்தைப் பார்ப்பார்கள். உங்களது அதே முன்மாதிரியைத்தான் பார்ப்பார்கள். நீங்கள் முழுமையான முறையில் சுயமே உங்களை இந்த போதனைக்கு ஏற்ப செயல்படுபவர்களாக ஆக்கிக் கொள்ளவில்லையென்றால் ஒரு வகையில் நீங்கள் வருங்காலத் தலைமுறையினரை அழித்து விடுவீர்கள்.

மனிதனின் இயல்பில் முன்மாதிரியை வணங்குதல் இருக்கின்றது. அவன் முன்மாதிரியில் இருந்து மிக விரைவில் படிப்பினையைப் பெறுகின்றான். ஒரு குடிகாரன் மது அருந்த வேண்டாம் என்றோ அல்லது ஒரு விபச்சாரி விபச்சாரம் செய்யாதே என்றோ ஒரு திருடன் இன்னொருவரைப் பார்த்து திருடாதே என்றோ கூறினால் அவர்களின் இந்த போதனைகளினால் மற்றவர்கள் என்ன பயனை அடையப் போகின்றார்கள்? மாறாக, அவர்கள் இவர் பெரும் தீயவர் ஆவார். அவர் சுயமே எதனை செய்கின்றாரோ அதிலிருந்து மற்றவர்களை தடுக்கின்றார் என்றே அவர்கள் கூறுவார்கள். எந்த மக்கள் சுயமே ஒரு தீமையில் ஆழ்ந்திருக்கும் நிலையில் அதைப் பற்றி பிறருக்கு போதனை செய்கின்றனரோ அவர்கள் மற்றவர்களையும் வழிகெடுக்கின்றனர். மற்றவர்களுக்கு போதனை செய்கின்றவர்கள் சுயமே அதற்கேற்ப செயல்படாத -வர்களாக இருந்தால் அவர்கள் ஈமான் இல்லாதவர்களாக இருக்கின்றனர். தமது சம்பவங்களை அவர்கள் விட்டுச் செல்கின்றனர். அவ்வாறு அறிவுரை கூறுபவர்கள் மூலமாக உலகிற்கு மிகப்பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது.

ஒரு மவ்லவியைப் பற்றி இவ்வாறு கூறப்படுகின்றது: அவர் ஒரு பள்ளிவாயில் கட்டுவதை சாக்காக வைத்து ஒரு இலட்சம் ரூபாயை ஒன்று திரட்டினார். ஓரிடத்தில் அவர் அறிவுரை கூறிக் கொண்டிருந்தார். அவரது அறிவுரையின் தாக்கத்திற்கு ஆளாகி ஒரு பெண் தனது ஒரு காலில் இருந்த கொலுசைக் கழற்றி அதனை அவரிடம் சந்தாவாக கொடுத்து விட்டார். மவ்லவி சாஹிப் அவர்கள் நல்ல பெண்ணே! உன்னுடைய கால் நரகத்திற்குச் செல்வதை நீ விரும்புகின்றாயா? என்று கேட்டார். உடனடியாக அந்த பெண் தனது மற்றொரு கொலுசையும் கழற்றி அதையும் அவரிடம் கொடுத்து விட்டார். மவ்லவி சாஹிப் அவர்களின் மனைவியும் அறிவுரை கூறப்படுகின்ற அந்த இடத்தில் இருந்தார். அவர் மீது அந்த அறிவுரையின் பெரும் தாக்கம் ஏற்பட்டது. மவ்லவி சாஹிப் வீட்டிற்கு வந்தபோது அவரது மனைவி அழுது கொண்டிருப்பதை அவர் பார்த்தார். அவர் தமது எல்லா நகைகளையும் பள்ளிவாயில் கட்டுவதற்காக மவ்லவி சாஹிபிடம் கொடுத்தார். அப்போது மவ்லவி சாஹிப் அவர்கள் நீங்கள் ஏன் அழுகின்றீர்கள்? இது சந்தா தொடர்பான ஒரு ஆலோசனையாக மட்டுமே இருந்தது. வேறு எதுவும் இல்லை எனறு கூறினார்.

சுருக்கமாக, இத்தகைய முன்மாதிரிகளால் உலகிற்கு மிகப்பெரும் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது. நமது ஜமாஅத் இத்தகைய விஷயங்களிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். நீங்கள் அத்தகையவர்களாக ஆகி விடாதீர்கள். எல்லா விதமான உணர்வுகளிலிருந்தும் நீங்கள் தவிர்ந்திருக்க வேண்டும். உங்களை சந்திக்கின்ற ஒவ்வோர் அந்நியரும் உங்களது முகத்தைப் பார்த்து உங்களை புரிந்து கொள்கின்றார். உங்களது ஒழுக்கங்கள், பழக்கவழக்கங்கள், கொள்கையில் உறுதியாக நிலைத்திருப்பது, இறைவனின் கட்டளைகளைப் பேணுவது ஆகியவற்றில் நீங்கள் எவ்வாறு இருக்கின்றீர்கள்? என்பதை அவர் பார்க்கின்றார். அவை சிறந்த நிலையில் இல்லாமல் இருந்தால் உங்கள் மூலமாக அவர் தடுமாற்றமடைகின்றார். எனவே, இந்த விஷயங்களை நினைவில் வையுங்கள்.

(மல்∴பூஸாத் தொகுதி 3 பக்கம் 516-518; 2003 ஆம் ஆண்டு பதிப்பு)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad